



Tamilcnn இன்

# தாய்வீடு

THAAIVEEDU

தீபாவளி சிறப்பிதழ்

මංජු ලර්නර්ස්
மஞ்சு லேனர்ஸ்



TEL
077-7348989
024-2227467
අංක 48, බස් නැවතුම්පොළ, වව්නියාව.
இல 48, பஸ் நிலையம், வவுனியா.

021 222 3303 | thaaiveedu@tamilcnn.com | வீடு 04 | நவம்பர் 05, 2015 | விலை ரூபா 20/=

## தமிழ் அரசியல் தலைமைகள் தவறவிட்ட தருணங்கள்






## அசுரப் போரை அடக்கிய பெண்ணின் இன்றைய நிலை


## தீபாவளிக்கு தெறிக்க வரும் வேதாளம்






## டோனியா? ஹோக்லியா?





## இப்படியான ஆண்களைதான் பெண்களுக்கு பிடிக்கும்



HARI
Engineers & Contractors
+94772830694
www.hariengineering.com
Alvai Road, Nelliadi

We Provide
Apartment Building
Modern House
Schools
Multi Complex
Office Building
Hotel & Restaurant
Wedding Hall



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



Tharshine
Multi Corner
Phones
Phone Accessories
Phones Covers
Phone Covers | Tempered Glasses | Memory Card & Pen Drive | Sound Box | Hand Free & Charges
MP3 Player Speakers | Camera Bags | Power Bank
CALL : 076 7925252 024 561 3113
46, 2nd Cross Street, Vavuniya.
13/14, Point pedro Road, Nallur.

KIRUBAA
LEARNERS
Government Approved Driving Trainning School
கிருபா லேணர்ஸ்





அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

வடக்கின் கணனிப் பூங்கா
0777 570 124
northernpcpark
info@pcpark.co
www.pcpark.co



Northern
PC PARK PVT (Ltd)
SHOW ROOM 1 : #269E, Palaly Road, Kantharmadam, Jaffna. Tel : 021 222 0388
SHOW ROOM 2 : #10, Muddaskadai Junction, Stanly Road, Jaffna. Tel : 021 222 2050


உண்மையை உரக்கச் சொல்லும் ஒரே இதழ்



Nelly Star Hotel
84, 2nd Cross Street, Vavuniya.
http://www.nelly-star-hotel-vavuniya-sri-lanka.lakpura.com/
+94 24 222 4477




Maxim foto
Maxim Foto
Photography & Digital Imaging
TEL 077 5380085
024 2227800
Personalize Gifts
Mail: Maximfotovijayakumar@gmail.com

SATS
Fitness Center
VAVUNIYA
SATS
TRAVELS
077 0303 677
No 208, Karappankadu, Vavuniya.




KANAKENDRA'S
FURNITURE CENTER
கனகேந்திராஸ்
தளபாட விற்பனை நிலையம்
இல. 11. 13. சூசைப்பிள்ளையார் குளம் வீதி. வவுனியா
No. 11,13, Soosaipillaiyarkulam Road, Vavuniya
024 222 2078
077 452 6984




கால்நடை சிகிச்சை நிலையம்
ANIMAL CLINIC & SURGERY
BLUE PAW VET CARE
Kurumankadu, Near the HNB, Vavuniya
குருமன்காடு, HNB அருகாமையில்.வவுனியா.
077 254 4185
076 644 9480
077 638 7870




THILINA LEARNERS
A GRADE DRIVING SCHOOL
#62A, 1st Floor, Bus Stand, Vavuniya
024 222 5629 | 077 633 9375 | 077 567 2210




Gheerthiekas
Specialist in Wedding Sarees
Salwars & All Ladies & Gents wear
கீர்த்திகாஸ்
No. 34/B, Tharmalingam Road, Vavuniya.
024 222 0099 | 078 908 4886




FME
INSTITUTION
அரிய சந்தர்ப்பம்...!
பத்திரிகை , வானொலி , தொலைக்காட்சி , திரைப்படத்
துறைகளில் சாதிக்க விரும்புபவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு
அறிவிப்பாளர் | பத்திரிகையாளர் | பத்தி எழுத்தாளர் | செய்தி தயாரிப்பாளர்
இயக்குனர் | ஒளிப்பதிவாளர் | கதாசிரியர்
போன்ற துறைகளில் பிரகாசித்திட முழுமையான பயிற்சிகளுடன் கூடிய பாடத்திட்டம்.
இணைந்திட, அறிந்திட, உலகை வெற்றிகொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
INSTITUTE OF FUNDAMENTAL MEDIA EDUCATION
NO:-149,Goods shed road ,Vavuniya Tel : 024 2228090 / 077 2809990 facebook- fmeinst




New Lovers Corner
special gift for your lover
Head Office : #4, Alady Junction, Manipay
Tel : 021 225 6444
#164, Ramanathan Road, Jaffna
Tel : 021 221 9499
#13, 1st Floor, Cargils Square, Jaffna
Tel : 021 222 7070
#9, Kanagapuram Road, Udaya Nagar, Kilinochchi
Tel : 021 228 5111

# தொழில்நுட்ப வளர்ச்சியும்

# ஈழத் தமிழ் பெண்களின் தளர்ச்சியும்

(யாரும் சத்தமாக வாசிக்க வேண்டாம்)

தொகுப்பு : குணா




யாராக இருந்தாலும் தன்னுடைய இனம் மதம், மொழி, கலாசார பண்பாடுகளை விட்டு போகவும் மாட்டார்கள் விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள். ஏனெனில் இவை ஒரு தனி மனிதனை ஒரு வரையறைக்குள் தேசிய மனிதனாக்கும் அம்சங்கள் ஆனால் தொடர்ச்சியாக மாற்றம் என்பதை அடையாமல் எந்த ஒரு இனத்தின் மத இன பண்பாட்டு கலாசார கூறுகள் இருந்ததில்லை அதற்காக இன்னொரு தளத்திற்கு முழுமையாக மாற்றமடையவும் கூடாது.

ஒரு இனம் அழிய வேண்டுமாயின் அதன் தாய் மொழி நவீன உலகிற்கு ஈடுகொடுக்க முடியாமல் அழிய வேண்டும் தொடர்ந்து அந்த மொழியை பேசுகின்ற இனத்தின் பண்பாடு கலாசாரக் கூறுகள் சிதைக்கப்பட்டு மாற்றப் பட்டு தன் மூலத்தினை முழுமையாக இழக்க வேண்டும்.

இவ்வாறு தான் உலகில் பல மூத்த மொழிகள் எழுத்து வடிவில் பேச்சு வடிவில் இருந்து இல்லாது ஒழிந்திருக்கின்றன. பல மொழிகள் வழக்கொழியும் ஆபத்தையும் அடைந்திருக்கின்றன.

நவீன உலகில் எல்லாமே தொழில் நுட்பத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எல்லா நுட்பங்களையும் விஞ்ஞானம் மனித மேம்பாட்டிற்கென்றே செய்கின்றது. ஆனால் மனிதன் அதை தன் வளர்ச்சிக்கு பயன்படுத்தியதை விட தன் தளர்ச்சிக்காய் பயன்படுத்தியமையே அதிகம் எனலாம்.

அந்த வகையில் அண்மையில் சந்தைகளில் பரபரப்பாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கும். **Android, Windows, I Phones** வகைகளில் காணப்படும் Viber, Whatsapp, Skype, Line, IMO போன்ற நவீன செயலிகளை பல்வேறுபட்ட இன்னல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் எமது பெண்கள் உள்ளாகி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

உண்மையில் சில விடயங்களை மனம் விட்டு நல்ல பெற்றோர் நல்ல அண்ணா அக்கா நல்ல பாதுகாவலர் நல்ல காதலன் காதலி போன்றோரிடம் பகிர வேண்டி இருக்கிறது. ஆனால் யாரும் தயவு செய்து இதை சத்தமிட்டு வாசிக்க வேண்டாம் அடுத்தவர் கேட்டால் எம் பெண்களுக்கு தான் அசிங்கம்.

இன்று சாதாரணமாகவே 10, 12 வயது முதல் சிறுவன் சிறுமியர் கையடக்க தொலைபேசியை ஏதே ஒரு விதத்தில் பயன்படுத்துகின்ற நிலமை எம் நாட்டில் தோன்றி விட்டது. ஆதலால் இன்று திருமணத்திற்கு முதல் தான் பாவித்த ஒரு கையடக்க தொலைபேசி இலக்கத்தை திருமணத்திற்கு பின் எந்தப் பெண்ணும் பாவிப்பதில்லை.

அப்படிப் பாவித்தால் அவர்கள் தான் உண்மையில் கலியுக கண்ணகி. ஆனால் ஆணாதிக்கம்மிக்க எமது தமிழ் சமூகத்தில் ஆண்கள், யார் என்னை என்ன கேட்பது என்ற தோறணையிலும் மற்றும் பிழையை சரியாய் செய்யும் தன்மையிலும் பல ஆண்கள் திருமணத்திற்கு முன்பான அதே தொலைபேசி இலக்கத்தையே இன்றும் பயன்படுத்துகின்றனர். ஆனால் பெண்கள் தான் பாவம் ஒரு பெண் திருமணத்தின் பின்னர் தொலைபேசி இலக்கம் மட்டுமல்ல Viber, Facebook , Whatsapp என பல விடயங்களையும் மாற்றிக் கொள்கிறாள்.

தன் கணவன் தன்னை எந்த விதத்திலும் சந்தேகப்பட இடமளிக்க கூடாது என்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தாலும் திருமணத்திற்கு முன்பான காதல், நட்பு எல்லாம் திருமணத்தோடு பெரும்பாலான பெண்களுக்கு காலாவதியாகி விடுகிறது.

இன்று பல Computer , Phone கடைகளிலும் வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் செய்து இங்கு வாழும் பெண்கள் கேட்பதெல்லாம் Skypeல் முந்திக் கதைச்சதெல்லாம் இப்ப கிஸ்ரியா எடுக்கலாமோ? என்ர Viber வேற ஆட்கள் பார்க்கலாமோ? Face book chat அழிக்கலாமோ மெமரி காட்ல இருந்து போட்ட வீடியோவ அழிச்ச பிறகும் திரும்ப எடுக்கலாமோ?

என ஏராளமான கேள்விகள் இப்படியான கேள்விகளெல்லாம் ஏன் எதற்காக என்று சிந்திக்க தோன்றுகிறது. வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் செய்த பெண்களுக்கு எம்பசீல நீங்கள் இப்பவும் அவரோட கதைக்கிறதுக்கு ஆதாரம் கேட்டால் கொடுக்க முடியாது முழுசுகின்ற நிலை பரவலாக காணப்படுகிறது.

வைபரில் கதைச்சத எடுத்துக் காட்ட விரும்பினாலும் எல்லோருடனும் கதைத்ததை காட்ட முடிவதில்லை. Facebook ல் கதைச்சத காட்ட விரும்பினால் கிஸ்றி கொடுக்க வேண்டும் அவரோட மட்டும் கதைத்தவர்கள் உடனே கிஸ்றியை கொடுத்து விடுவார்கள். மற்றவர்கள் தம் இயலாமையையால் மௌனிக்கிறார்கள்.

இவ்வாறு எம் பெண்கள் இந்த தொழில் நுட்பம் ஊடாக வசதிகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்திவிட்டு படும் அவஸ்தைகள் ஏராளம் உண்டு. எல்லாவற்றையும் இங்கு என்னால் முழுமையாக சொல்ல முடியவில்லை.

சாதாரணமாவே ஒருவரின் கையடக்க தொலைபேசி பழுதாகி விட்டால் சிம்காட் மெமறிக்காட் மற்றம் முக்கியமான Phone save செய்த இலக்கங்கள் குறுந்தகவல்கள் என எல்லாவற்றையும் தம்வசப்படுத்தி விட்டு வெறும் Phone மாத்திரம் திருத்த கொடுக்க வேண்டும் என்ற அடிப்படை அறிவு இல்லாமல் எம் ஆண்களும் பெண்களும் அண்மைக் காலங்களாகபடும் அவஸ்தை ஏராளம்.

ஒருவர் Viber ஊடாக யாரோடெல்லாம் கதைக்கிறார் என்பதை இன்னொருவர் ஒரு சில நிமிடம் குறித்த நபரின் கையடக்க தொலைபேசியை வைத்திருப்பதனூடாக தன் வசப்படுத்தி கொள்ளலாம். அதே போன்று Bluetooth ஊடாகவும் பல தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே தொழில்நுட்ப அறிவினை பெறுவதும் தொழில்நுட்ப சாதனங்களை பயப்படுத்துவதும் ஒருவர் நவீன உலகிற்கு தன்னை பதிவு செய்து ஈடுகொடுக்கவேயன்றி தன் நிலையில் தளர்ச்சியடைவதற்கு அல்ல இவ்வாறான விடயங்களுக்கு ஆண்களும் உள்ளாகினாலும் இந்த ஆணாதிக்க சமூகம் ஆண்களை குறைகூறுவது இல்லை.

ஏனெனில் ஓடிப்போனவன் சம்பவம் ஓடிப்போனவள் சரித்திரம். என பண்பாடு கலாச்சாரம் வளர்த்தவர்கள் நாமாச்சே எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஆண் தான் என்ன தவறு செய்தாலும் தனக்கு வரப்போகும் மனைவி எந்த தவறும் செய்யாதவளாய் இருக்க வேண்டும் என்று எண்ணுவதும் பெண்கள் பெருந்தன்மையோடு ஆண்களை மன்னிப்பதும் தன் அக்கா தங்கையை ஒரு மாதிரியும் வேற பெண்களை இன்னொரு தளத்திலும் வைத்து மதிப்பிடுவதும் என ஏராளமான காரணிகள் இவ்வாறான விடயங்களில் செல்வாக்கு செலுத்துகின்றன.

ஆகவே எமது தமிழ் பேசும் பெண்கள் தாம் பாவிக்கும் தொழில்நுட்பங்களால் கறைபடியாமல் குறைபடாமல் தம் வாழ்வியலில் வெற்றி காண வேண்டும் என்பதே ஒவ்வொரு தனிப்பட்ட ஆடவனின் இந்த சமூகத்தின் விருப்பமாகும். ■





Tamilcnn இன்
தாய்வீடு
THAAIVEEDU
thaaiveedu@tamilcnn.com

தலைமையகம் : 262, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3303, 021 492 7355
வவுனியா 54, A9 வீதி, வவுனியா. 024 493 0063
கிழக்கு மாகாணம் 141, பிரதான வீதி, கல்முனை. 067 222 6939, 077 484 3738

ஆசிரியர் : செ. கிரிசாந்தன் விளம்பரம் : பா. கபில்ராஜ் புகைப்பட நிருபர் : சா. மயூரன்
கணினி வடிவமைப்பு : தி.அர்ஜின் விநியோகம் : ச.தேவகாந்தன்

ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

# இலங்கையின் ஆட்சியாளர்களும் தமிழ் மக்களும்

தமிழன் எவ்வளவு தான் உரிமைகளுக்காக போராடினாலும் இலங்கையின் ஆட்சியாளர்கள் என்போர் பேரினவாத சிந்தனை கொண்டவர்களாகவே தொடர்ந்தும் இருந்தும் வருகின்றனர். இவர்களிடம் இனியும் நீதியை எதிர்பார்ப்பதென்பது முட்டாள் தனமாகும். தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வையோ, பரிகார நீதியையோ எப்பொழுதும் இவர்கள் பெற்றுக் கொடுக்க மாட்டார்கள் என்பதே யதார்த்தமானது. இதற்கு பெரிதாக நாம் முன்னோக்கிப் பார்க்க வேண்டியதில்லை. புதிய அரசாங்கம் பதவியேற்பு, கலப்பு ஐ.நா விசாரணைப் பொறிமுறை, நாடாளுமன்றத் தேர்தல் போன்றவற்றை அடுத்து நிகழும் சம்பவங்களை எடுத்துப் பார்த்தால், நல்லாட்சி அரசு என்று கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரிபால, ரணில் கூட்டமைப்பில் உருவான தேசிய அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை, முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு பரிகார நீதி போன்ற விடயங்களை நீர்த்துப் போகச் செய்யும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக அரங்கேற்றுவதனைக் காணலாம். எப்படியாவது போர்க்குற்றவாளிகளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் தோரணையில் தான் ஜெனீவாவில் நடந்து கொண்டது அரசு. ஆனால், தற்போது நடைமுறையில் நடப்பதோ வேறு. போர்க்குற்ற விசாரணை ஏதேனும் நடந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கோ அல்லது கோத்தபாய ராஜபக்ஷவுக்கோ எந்தத் தண்டனையும் வழங்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் தற்போது கூறியுள்ளது.

இதனை சற்று உற்றுநோக்கிப் பார்த்தால், போர்க்குற்றவாளிகளில் முதன்மையான வர்கள் என்று தமிழ் மக்கள் கருதுகின்றவர்களுக்கு தண்டனை வழங்கப்பட மாட்டாது என்றால், போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுவதனால் எந்தவித நன்மையும் தமிழர்களுக்குக் கிடையாது என்பது உறுதியாகின்றது. எம் இனத்தின் மீது நீதி, நெறிமுறையற்ற போர் கட்டவிழ்த்து விடப்பட்ட போது ஆட்சிக் கதிரையில் இருந்தவர் மஹிந்த ராஜபக்ஸ. பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் தம்பி கோத்தபாய ராஜபக்ஸ. ஆகவே, முக்கியமாகப் போரை வழிநடாத்தியவர்கள், பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கே எவ்வித தண்டனையும் வழங்கப்பட மாட்டாது என்றால், யாருடைய காதில் பூச்சுற்ற முயல்கிறது மைத்திரி அரசு?

**அடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை,**


உண்மையில் இது ஒரு மிகப் பெரிய மனிதாபிமானப் பிரச்சினை. பயங்கரவாத தடைச் சட்டத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்திய மாறி, மாறி ஆண்ட அரசுகள் ஏராளமான தமிழ் இளைஞர்களை காரணமின்றி கைது செய்து சிறையில் தள்ளியது. இதனால், எத்தனையோ குடும்பங்கள் சிதைந்து போனது. வாழ்வாதாரங்களும் அடியோடு மிகப்பெரும் பாதிப்பை எதிர்கொண்டன. சிறையிலும் அவர்கள் பெரும் உடல், உள ரீதியான நெருக்கடிகளை எதிர் கொண்டனர். ஆனால், இதற்கு எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கையையும், இதுவரை தமிழ் அரசியல் தலைமைகள் யாரும் எடுக்கவில்லை என்பதே மறக்க முடியாத உண்மை. புதிய அரசுக்கு முண்டு கொடுத்து நல்லாட்சி என்கிற ஒரு ஆட்சியை அமைத்தவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வலியப் போய் வாங்கியவர்கள்.. இவற்றைப் பெற முன் குறைந்தபட்சம் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவியுங்கள் என்கிற ஒரேயொரு கோரிக்கையை ஆவது முன்வைத்திருக்கலாம். அப்படி விடுவித்தால் தான் உங்கள் ஆட்சிக்கு நாங்கள் உறுதுணை வழங்குவோம் என கூறியிருக்கலாம். ஆனால், எம் தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் பதவி, சொகுசு வாழ்க்கை போன்றவற்றில் தான் குறியாக இருக்கின்றனரே ஒழிய தமிழ் மக்களின் விடிவில் அல்ல. என்பதற்கு மேலே கூறிய ஒரே சம்பவம் போதும். இலங்கை அரசும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதில்லை என்பதற்கு அண்மைய அரச சாட்சி தான் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் அண்மையில் கூறியது, தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக இருந்தால், படையினருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். என்கிற கூற்று.

**அடுத்து காணாமல் போனோர் பிரச்சினை,**

உண்மையில் இந்தப் பிரச்சினையை தமிழ் அரசியல் தலைமைகள் கைவிட்டு விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கடந்தகாலப் போரில் எவ்வளவு தமிழ் மக்கள் காணாமல் போனார்கள் என்கிற தொகை இதுவரை ஒரு விஞ்ஞான ரீதியாக புள்ளி விபரங்க ளுடன் முழுமையான தகவல்கள் இன்று வரை இல்லை. குத்துமதிப்பாகவே பேச்சுக்கு இவ்வளவு பேர் காணாமல் போனார்கள் என்று கூறி வருகின்றார்கள். சில நேரங்களில் காணாமல் போனவர்கள் என்று முன்னர் கூறப்பட்டவர்கள் திடீரென படைத்தரப்பால் கொண்டு வந்து இறக்கி விடப்பட்ட சம்பவங்களும் நடந்தேறி வருகின்றன. இதனைத் தொடர்ந்து தமது உறவுகளும் இப்படி எங்காவது ஒரு படை முகாமில் உயிருடன் இருப்பார் என காணாமல் போனோரின் உறவினர்கள் அங்கலாய்க்கத் தொடங்கியுள்ளனர். இலங்கையில் ஏராளமானோர் காணாமல் போய்விட்டனர் என்கிற செய்தி இதுவரை சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாக வில்லை. டேவிட் கமரூன் வந்த போதும் சரி ஏனைய தலைவர்களின் வருகைகளின் போதும் சரி காணாமல் போனோரின் உறவுகள் வெயில், மழைகளை பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாகப் போராடினர். இருந்தும் எம் உறவுகளின் தொடர் கண்ணீருக்கு எவ்வித விடிவும் இல்லாமல் உள்ளது.

எங்களை ஆள்பவர்களும் அப்படி, எங்களுக்கு அதைத் தருவேன், இதைத் தருவேன் என்று சொல்லி எம்மிடம் வாக்குக் கேட்டவர்களும் அப்படி?

**தமிழர்களுக்கு விடிவு தான் எப்போது?**



# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என அங்கீகரிப்பதாக இருத்தல் வேண்டும்!

அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம்

இனப்பிரச்சினை என்பது ஒரு தேசிய இனம் அழிக்கப்படுவதனால் ஏற்படு கின்ற பிரச்சினையே. இதற்கான தீர்வு தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதாக இருத்தல் வேண்டும். இது தவிர, வேறு எத்தீர்வும் உண்மையான தீர்வாக அமையமாட்டாது என அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்திற்கான மக்கள் இயக்கம் அரசியல் தீர்வு பற்றி கொழும்பில் நடாத்திய கருத்தரங்கில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒருவரை பீடித்த நோய் என்ன என்பதனை அறிந்தால் தான் அந்த நோய்க்குரிய மருத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ளமுடியும். அதேபோல இனப்பி ரச் சினை என்றால் என்ன என்பதனை நாம் தெளிவாக விளங்கிக்கொண்டால்தான் அதற்கான அரசியல் தீர்வையும் வலுவாக எம்மால் முன்வைக்கமுடியும்.

மாக்சிய மூலவர்கள் நிலம், மொழி, கூட்டுவாழ்க்கையை பேணக்கூடிய பொருளாதாரம், கலாசாரம் என்பவற்றைக் கொண்ட மக்கள் கூட்டத்தை ஒரு தேசிய இனம் என வரையறுத்துள்ளனர். அத்தேசிய இனத்திற்கு தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கக்கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு எனவும் கூறியுள் ளனர். நாம் ஒரு தேசிய இனமாக இருக்கின்றோம் என்ற கூட்டு உணர்வு அல்லது கூட்டுப் பிரக்ஞை தான் தேசியம் என அழைக்கப்படுகிறது.

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாக இருக்கின்றனர். இதனை சிலர் தேசம் என்றும் வரையறுப்பதுண்டு. இதனடிப்படையில் தமிழ்மக்களுக்கு தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கக்கூடிய சுயநிர்ணய உரிமையும் உண்டு. தமிழ்மக்கள் தமிழ்த்தேசியம் என்ற தேசிய உணர்வால் பிணைக்கப்பட்டுள்ளனர். அதனை பல தடவைகள் தெளிவாக வெளிப்படுத்தியும் உள்ளனர். அவர்களது வாக்களிப்பு முறையும் அதனை வலுவாக வெளிப்படுத்தியிருந்தது.

தமிழ்த்தேசிய இனத்தின் தாங்கு தூண்களாக இருப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம். அவை திட்டமிட்டு சிதைக்கப்படுவதுதான் இனப்பிரச்சி னையாகும். மக்கள் கூட்டத்தையும், தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களில் ஐந்தாவதாக கூறிக் கொள்ளலாம். தமிழ்மக்களின் இதுவரைகால போராட்டம் என்பது தமிழ்த்தேசிய இனத்தின் தாங்கு தூண்களை சிதைப்பவர்களுக்கும், அதனை பாதுகாக்க முற்படுபவர்களுக்குமிடையிலான போராட்டமே. வளர்ச்சி நிலையில் இப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக எழுச்சியடைந்தது. வல்லரசுகளின் உதவியுடன் இலங்கை அரசு ஆயுதப் போராட்டத்தை கொடூரமாக நசுக்கியது என்பது வரலாறு. இலங்கையை மையப்படுத்திய புவிசார் அரசியல் காரணமாக உலக வல்லரசுகளும், பிராந்திய வல்லரசும் போராட்டத்தை சிதைப்பதற்கு துணை போயிருந்தன.

அரசியல் தீர்வின் நடைமுறைவடிவம் நான்கு விடயங்களை பிரதானமாக உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அதிகாரஅலகு, சுயநிர்ணயஉரிமையைப் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்கள், ஏனைய இனங்களுடன் கூட்டுவாழ்க்கையை பிரயோகிக்கக்கூடிய வகையில் மத்திய அரசில்பங்கு, வழங்கப்பட்ட அதிகாரங்க ளுக்கான பாதுகாப்பு என்பவையே இந்நான்குமாகும்.

தமிழ்மக்களுக்கான அதிகார அலகு வடக்கு, கிழக்கு இணைந்த அலகாக இருத்தல் வேண்டும். தமிழ்மக்கள் தங்களது கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும் பேணுவதற்கு இவ்விணைந்த அதிகார அலகு மிகவும் அவசியமானதாகும். இதில் முஸ்லிம் மக்களினுடைய நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக அவர்களுடன் பேசித்தீர்க்கலாம். முஸ்லிம் மக்கள் உடன்படாவிட்டால் கிழக்கில் தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களை வடக்குடன் இணைத்தாவது இவ்வதிகார அலகு உருவாக்கப்படல் வேண்டும். இதில் எந்தவித விட்டுக்கொடுப்பிற்கும் இடமிருக்ககூடாது.

பன்மைத்தன்மையான அதிகாரக்கட்டமைப்பு என்பது கூட்டுப்பகிர்வு என்ற தத்துவத்தை உள்ளடக்கியது. இதனடிப்படையில் மத்தியஅரசாங்கத்தில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகப் பங்குபற்றுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக தமிழ்மக்கள் தொடர்பான விவகாரங்களைப் பொறுத்தவரை அவர்களிடம் வீட்டோ அதிகாரம் இருத்தல் வேண்டும். பல நாடுகள் இதற்காக இரட்டை வாக்கெடுப்பு முறையை சிபார்சு செய்துள்ளன.

தமிழ்மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் மட்டும் போதாது. வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கான பாதுகாப்பும் இருத்தல் வேண்டும். அதிகாரங்களைப் பொறுத்தவரை ஒரு கையால் கொடுத்து, மறுகையால் பறிக்கும் வரலாற்று அனுபவமே தமிழ்மக்களிடம் உள்ளது. சோல்பரி யாப்பின் 29 வது பிரிவு தொடக்கம், 13வது திருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைவரை இவை பற்றி நிறையவே அனுபவங்கள் உண்டு.

நீதித்துறை தமிழ்மக்களைப் பாதுகாக்கும் என நம்புவதற்கில்லை. இலங்கை அரசின் அனைத்து அரச இயந்திரங்களுமே பேரினவாத மயமாக்கப்பட்ட நிலையில் நீதித்துறையும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. முன்னரே கூறியது போல பிரதான அழுத்தி தமிழ்மக்களின் கைகளில் இருக்கும் போதே இவற்றை சாத்தியமாக்க முடியும்.

அரசியல் தீர்விற்காக அக்கறையுடன் உழைக்கும் சக்திகள் இனப்பிரச்சினைத் தீர்விற்கான மேற்கூறிய கோட்பாட்டு அடிப்படைகளையும் நடைமுறை வடிவங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

**"தமிழ்த் தேசிய இனத்தின் தாங்கு தூண்களாக இருப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் ஆகும்."**



செலிங்கோ ஆயுட் காப்புறுதி - வவுனியா

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனமான எமது செலிங்கோ லைஃப் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கிளைகளை விஸ்தீரிக்க உள்ளது. இதற்கான பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கிளை முகாமையாளர்கள் - தகாபுல் கிளை முகாமையாளர்கள்
குழு முகாமையாளர் - தகாபுல் குழு முகாமையாளர்
விற்பனை ஆலோசகர்கள் - தகாபுல் விற்பனை ஆலோசகர்கள்

தகமைகள் : வயது 18-55 வரை
க.பொ.த சா தர பரீட்சையில் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி
காப்புறுதி மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : P.சதீஸ்குமார்
செலிங்கோ லைஃப்,
இல. 52, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.
077 784 4223
024 222 1584



## உலகத்தை மாற்றிய புகைப்படங்கள் - 01

# அசுரப் போரை அடக்கிய பெண்ணின் இன்றைய நிலை



தொகுப்பு : மயூரன்




பெண்ணின் இன்றைய நிலை



வியட்னாம் போர் முடிவுற்று 43 வருடங்கள் கடந்து விட்டபோதிலும் போரின் வடுக்கள் இன்னும் மாறாத வடுக்களாய் காணப்படுகின்றன. போரில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்று வருகிறது அதன் கண்ணோட்டம் இங்கே.

வியட்னாம் போரின் வாழும் வரலாறு என அழைக்கப்படும் 52 வயதான Kim Phuc இன் தீக்காயங்களுக்கு வலியைப் போக்க இலவச ரேசர் அறுவைச் சிகிச்சை அமெரிக்காவில் உள்ள Miami Dermatology and Laser Institute இல் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், அப்பெண் கடந்த 40 ஆண்டுகளாக தீக்காய வலிகளை உடலில் தாங்கிய வண்ணமே வாழ்ந்து வந்துள்ளார். வியட்னாம் போரை நிறுத்த, அமெரிக்காவுக்கு எதிராக பொதுமக்களின் கோப அலைகளை எழ வைத்த புகைப்படத்துக்குப் பின்னால் தான் இத்தனை வலிகள்.

அன்று, உடல் முழுவதும் தீக்காயங்களுடன், தனது இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு முகம் முழுவதும் பீதியுடன் நிர்வாணமாக ஒரு சிறுமி ஓடிவரும் இந்தப் படம் பார்ப்பவர்கள் அனைவரையும் கதி கலங்கச் செய்துவிடும். தெற்கு வியட்நாம் போட்ட நாப்பாம் குண்டினால் தாக்குதலுக்குள்ளான இந்தச் சிறுமி ஓடி வரும் படம் உலக நாடுகள் மொத்தத்தையும் அப்போது அசைத்துப் பார்த்தது. சுமார் 19 வருடங்களாக நடந்து கொண்டிருந்த வியட்னாம் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர இந்தப் படம் மிகப் பெரிய காரணமாக அமைந்தது.

1954ல் வடக்கு வியட்னாம் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி கொண்டது. அதன் பிறகு வடக்கு, தெற்கு என இரண்டாக பிரிந்திருந்த வியட்னாமை, சோவியத் யூனியன் மற்றும் சீனாவைப் போல ஒரே நாடாக



ஆதிக்கம் செலுத்த விரும்பியது வடக்கு வியட்னாம். அதேசமயம் தெற்கு வியடனாமும் தன்னுடைய சுயாட்சியை விட்டுக்கொடுக்காமல் இருப்பதற்காக வட அமெரிக்காவுடன் சேர்ந்து வடக்கை எதிர்க்க விரும்பியது.

இந்தப் போரில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் தெற்கு வியட்னாமுக்கு ஆதரவாக நேரடியாகப் பங்கேற்றனர். சீனா மற்றும் ரஸ்யாவும் வடக்கு வியட்னாமுக்கு அதிகளவில் ஆயுதங்களையும், போர் உத்திகளையும் நேரடியாக கொடுத்து வந்தது. இந்தப் போரின் உச்சத்தில் 58,200 அமெரிக்க இராணுவ வீரர்களும், 11 லட்சம் வியடனாம் வீரர்களும், சுமார் 20 லட்சம் பொதுமக்களும் மாண்டு போயினர்.

போர் உச்சத்தில் இருந்த காலகட்டமான 1972 ஜூன் 9ம் நாள் தெற்கு வியட்னாம் பெட்ரோலிய இரசாயனம் கொண்ட நாப்பாம் குண்டினை தெற்கு வியட்னாமில் இருக்கும் (அப்போது வடக்கு வியட்னாமின் கட்டுப்பாட்டில் இருந்த) தராங்பாங்க் என்ற கிராமத்தில் வீசியது. இந்த நிலையில் தான் அந்தக் கிராமத்தில் இருந்த எட்டு வயதான சிறுமி பான் தி கிம் ப்யூக் (Phan Thi Kim Phuc) தன் சகோதரர்கள் மற்றும் உறவுக்கார சிறுவர்களுடன் ஓடி வந்தாள். அப்போது சிறுமி கிம் ப்யூக்கின் உடைகள் முழுவதும் எரிந்து உடலிலும் தீக்காயம் பரவிய நிலையில் சுடுது சுடுது என்று கதறியபடியே இராணுவம் இருந்த பகுதியை நோக்கி ஓடி வருகிறாள்.

அப்போது அவளுக்கு சற்று தொலைவில் இறந்துபோன ஒரு குழந்தையுடன் அலறிக்கொண்டு வந்த ஒரு மூதாட்டியை அங்கிருந்த புகைப்படக்காரர்கள் அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த அசோசியேட் பிரஸ்சின் புகைப்பட பத்திரிகையாளர் நிக் வுட் (Nick Ut) தனது View finder ஓரத்தில் நிர்வாணமாக ஓடிவரும் சிறுமியை பார்த்தார். ஏதோ பெரிய அசம்பாவிதம் நடந்திருப்பதை உணர்ந்து, தன் கேமராவை அவளை நோக்கி திருப்பினார். மற்ற புகைப்படக்காரர்கள் அனைவரும் அந்த மூதாட்டியையும் இறந்துபோன குழந்தையையும் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்க, நிக் வுட் மட்டும் நிர்வாணமாக ஓடிவந்த சிறுமி கிம் ப்யூக்கை படம் எடுக்கத் தொடங்கினார்.



புகைப்படக் காரர்

அந்தச் சிறுமியை புகைப்படம் எடுத்ததோடு நின்றுவிடாமல், அவளுக்கு முதலுதவி செய்து தன் காரிலேயே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று உயிர் பிழைக்கவும் வைத்த நிக்குக்கு அப்போது வயது 19 மட்டுமே. பிறகு, தன் அலுவலகத்துக்குச் சென்ற நிக், அந்தப் புகைப்படங்களை பிரிண்ட் போட்டு ஆசிரியர் குழுவினரிடம் காட்டியபோது, சிறுமி நிர்வாணமாக இருப்பதைக் காரணமாக காட்டி முதலில் அவர்கள் அதை பிரசுரிக்க மறுத்துவிட்டனர். பின்னர் நீண்ட விவாதத்துக்குப் பிறகு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தனது முதல் பக்கத்தில் இந்தப் படத்தை பிரசுரித்தது. இதன் தொடர்ச்சியாக இந்தப் படம் உலகில் இருந்த அத்தனைப் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளிலும் போருக்கு எதிரான படமாக அடையாளப்படுத்தப்பட்டது.

உலக நாடுகளின் கடுமையான கண்டனத்தினாலும், உள்நாட்டு மக்களின் எதிர்ப்பினாலும் 1973ம் ஆண்டு மார்ச் 23ம் திகதி அமெரிக்க இராணுவம் வியட்னாமை





விட்டு வெளியேறியது. 1975ம் ஆண்டு ஏப்ரல் 30ல், வடக்கு வியட்னாமிடம் தெற்கு வியட்னாம் சரணடைந்தது. 1976ல் ஜூலை 2ல் வியட்னாம் சோசலிசக் குடியரசு (The Socialist Republic of Vietnam) உருவானது. இந்தப் படத்துக்காக நிக்குக்கு 1973-ல் நோபல் பரிசுக்கு இணையான பத்திரிகை துறையில் உயரிய விருதான "புலிட்சர்" விருது வழங்கப்பட்டது.

இந்தப் புகைப்படத்தில் உள்ள சிறுமிக்கு இப்போது வயது 52. தற்போது கனடாவில் வசித்து வரும் இவரை 1994ம் ஆண்டு யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவராக (UNESCO Goodwill Ambassador) நியமிக்கப்பட்டார். 1997ல் 'Kim Phuc Foundation' என்னும் பெயரில் ஒரு தொண்டு நிறுவனம் துவங்கி, போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிக் கொண்டிருக்கிறார் கிம் ப்யூக். தற்போது இதனுடன் பல கிளை நிறுவனங்கள் இணைந்து "Kim Phuc Foundation International" என்ற பெயரில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று உலக மக்களின் சமாதானத்துக்கான குழந்தையாக மாறிவிட்டார் Kim Phuc.



அறுவைச் சிகிச்சையின் போது






# பொதுநலவாய போட்டிகளில் தங்கம், வெண்கலம் வென்ற யாழ் வீரர்கள்



இந்தியாவின் புனே நகரில் இடம் பெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளு தூக்கும் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் எஸ்.விஸ்ணுகாந் தங்கப் பதக்கத்தையும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஜே. டினோஜா வெண்கலப் பதக்கத்தையும் வென்று சாதனை புரிந்துள்ளனர்.

இந்தியாவின் புனே நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளு தூக்கும் போட்டியில் 64 நாடுகள் கலந்து கொண்டன. இந்தப் போட்டியில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற 17வயதுக்கு உட்பட்ட பளுதூக்கலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ். மத்திய கல்லூரி மாணவன் எஸ்.விஸ்ணுகாந்த் தங்கப்பதக்கத்தை கைப்பற்றிச் சாதனை படைத்தார். மொத்தமாக 227 கிலோ பளுவைத் தூக்கி விஸ்ணுகாந் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். பொதுநலவாயப் போட்டிகளில் கனிஸ்ட பிரிவு பளுதூக்கலில் இலங்கையின் உயர்மட்டப் பெறுபேறாக இருந்த 225 கிலோ விஸ்ணுகாந் மூலமாக முறியடிக்கப்பட்டு 227 கிலோவாக மாற்றியமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான பளு தூக்கும் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஜே.டினோஜா வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார். 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கல் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. 64 நாடுகள் கலந்துகொண்ட போட்டியில் 126 கிலோ எடையைத் தூக்கி டினோயா வெண்கலம் வென்றார். இதன் மூலம் பொதுநலவாயப் போட்டிகளில் பதக்கத்தை வென்ற முதல் தமிழ் மாணவி என்கின்ற சாதனையையும் அவர் நிலைநாட்டியுள்ளார்.

# சூதாட்டத்தால் வாய்ப்பை இழந்தது இரு அணிகள்

ஆறாவது பிரிமியர் தொடரில் ஏற்பட்ட சூதாட்ட பிரச்சினை காரணமாக, சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டன. இந்த அணிகள் 2018ல் தான் மீண்டும் தொடரில் பங்கேற்கும். இதனால் 2016, 17 தொடருக்கு மட்டும் புதியதாக இரு அணிகளை சேர்க்க முயற்சிகள் நடக்கின்றன.

இந்த நிலையில், சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு பதிலாக 2 புதிய அணிகள் விளையாடும் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்தது. இந்த புதிய அணிகள் விரைவில் தெரிவு செய்யப்படவிருக்கிறது. இந்த அணிகள் கிட்டத்தட்ட ராஜஸ்தான், சென்னை அணிகள் போன்றே இருக்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது, சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இருந்து தலா 5 வீரர்கள் 2 புதிய அணிகளுக்கு நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். இந்த 5 பேரில் அதிகபட்சமாக 4 இந்திய வீரர்கள் இருக்கலாம். மற்ற வீரர்கள் ஏலத்தில் விடப்படுவார்கள்.

இதன் படி புதிய ஐபிஎல் அணியில் சென்னை அணியில் இருந்து முன்னணி வீரர்களான டோனி, ரெய்னா, ஜடேஜா, அஸ்வின், மெக்குல்லம் ஆகியோர் இடம்பெற வாய்ப்பு உள்ளது. இந்த புதிய அணிகளின் விவரம் எதிர்வரும் 9ம் திகதி மும்பையில் நடக்கும் கிரிக்கெட் வாரிய கூட்டத்திற்கு பின்பே தெரியவரும்.

# டோனியா? ஹோக்லியா?

இந்திய அணி 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிகளின் காலிறுதிப் போட்டிகளுடன் வெளியேறியதைத் தொடர்ந்து, அதே ஆண்டு இடம்பெற்ற ரி20 உலகக்கிண்ண போட்டிகளுக்கு டோனி அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். அது முதல் ஆரம்பித்த டோனியின் வெற்றிப்பயணம் 2011 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்திய அணி உலகக்கிண்ணத்தை வென்றது வரை தொடர்ந்தது. எனினும் தற்போது இவரது தேவைப்பாடு இந்திய அணியில் குறைவடைந்துள்ளது எனலாம்.

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியுடன் டோனி டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கவாஸ்கர் போர்டர் தொடரில் இந்திய அணி தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பினை டோனி வெளியிட்டிருந்தார்.


எனினும் அதன் பின்னர் டோனி தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவார் என ஊடகங்கள் வெளியிடப்பட்டன. ஆனாலும் இதுவரை டோனி அணியில் இடம்பெறவில்லை என்பதுடன் இலங்கை அணிக்கெதிரான தொடருக்கு விராட் கோஹ்லி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியுடன் 22 வருடங்களின் பின்னர் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டதன் பின்னர் டெஸ்ட் அணிக்கான தலைமை கோஹ்லியிடமே தங்கிவிடும் என்பது உறுதியானது.

தற்போது அணியின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு குறிப்பாக 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை கருத்திற் கொண்டு ஒருநாள் போட்டிகளுக்கும் கோஹ்லியே அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் 2019 ஆம் ஆண்டின் போது டோனிக்கு 38 வயதாக இருக்கும். எனவே அக்காலப்பகுதியில் அணித்தலைமையை கொண்டுசெல்வது கடினமான விடயமாக காணப்படலாம் என்பதால் இந்த முடிவு எடுக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோஹ்லி தலைவராக நியமிக்கப்படும் பட்சத்தில் அது அவருக்கு மிகச்சிறந்த அனுபவத்தை அளிக்கும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. எனினும் நட்சத்திர வீரராக வலம் வந்த தோனி அணியிலிருந்து முற்றிலுமாக புறக்கணிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமன்று. ஏனெனில் டோனியின் சிறந்த தலைமைத்துவம் மற்றும் எடுக்கும் முடிவு என்பவை காரணமாக இந்திய அணி பல்வேறு போட்டிகளை வென்றது என்பது உண்மை.

# ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டி




ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டி 1ம் திகதி முதல் 12ம் திகதி வரை குவைத்தில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் குறிப்பிட்ட இலக்கை அடையும் வீரர், வீராங்கனைகள் 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டியில் இருந்து ஒலிம்பிக் தகுதி சுற்று அந்தஸ்து பறிக்கப்பட்டுள்ளது.


அரசின் தலையீடு காரணமாக குவைத் தேசிய ஒலிம்பிக் கமிட்டி தற்போது இடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டிக்கான தொழில்நுட்ப குழுவியில் இடம் பெற்றிருந்த இஸ்ரேலைச் சேர்ந்த யாசிர் டேவிட்டோவிச்சுக்கு “விசா“ வழங்க குவைத் அரசு மறுத்தது. இத்தகைய காரணங்களால் இந்த போட்டிக்குரிய ஒலிம்பிக் தகுதி வாய்ப்பை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அதிரடியாக ரத்து செய்து விட்டது. இந்த முடிவு அதிர்ச்சியும், ஏமாற்றமும் அளிப்பதாக இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர்கள் அபினவ் பிந்த்ரா, ஜாய்தீப் கர்மாகர் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர்.

என்றாலும் ஆசிய துப்பாக்கி சுடுதல் வீரர்கள் ஒலிம்பிக் வாய்ப்பை பெறுவதற்கு வசதியாக ஜனவரி பெப்ரவரியில் இன்னொரு ஆசிய போட்டி நடத்தப்பட இருக்கிறது. இந்த போட்டியை நடாத்தும் வாய்ப்பை பெற இந்தியா முயற்சித்து வருகிறது. துப்பாக்கி சுடுதல் பிரிவில் இந்தியாவில் இருந்து இதுவரை 8 பேர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு : விதுஷன்




## வீடு விற்பனைக்கு



181/4, அருச்சுணர் வீதி, பாண்டிருப்பில்
4 படுக்கையறைகள், ஒரு குளியலறை,
கிணறு, மின்சாரம் போன்ற
சகல வசதிகளுடன்
வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
கே. ஜெகதீஸ்வரன்
075 9430724
077 9454377

# இப்படியான ஆண்களை தான் பெண்களுக்கு பிடிக்கும்



ஒரு ஆணின் கவர்ச்சியாக பெண் நினைப்பது எது என கேட்டால், அந்த கேள்விக்கான பதில் பெண்ணுக்கு பெண் வேறுபடும். சராசரியாக பெண்கள் ஆண்களின் கவர்ச்சியாக எதை நினைக்கிறார்கள், அவர்களை கவர்வது எது, அவர்கள் எதிர்பார்ப்புகள் என்ன?

ஒரு ஆணின் கவர்ச்சி என்ன? ஒரு பெண்ணின் கவர்ச்சி என்ன? என்பதற்கு பல ஆண்களின் பதில் ஒரே வரியில், ஒரே மாதிரியான பதிலாகயிருந்தாலும், ஆண்களின் கவர்ச்சி என்ன என்பதை ஒரே வரியில் பதிலளிக்க இயலாது, ஏனென்றால் ஆண்களின் கவர்ச்சியில் பல வகைகள் உள்ளன.

**நிறம் :-** ஒரு ஆண் சிவந்த மேனியாக இருக்க வேண்டும் என "Fair complexion" உள்ள பெண்கள் கூட எதிர் பார்ப்பதில்லை. ஒரு ஆணின் வசீகரம் அவனின் நிறத்தில் அல்ல என்பதே பெண்களின் கருத்து.

**முகத் தோற்றம் :-** ஆணின் நிறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காத பெண்கள் கூட, அவர்கள் மீசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மீசை ஒரு ஆணுக்கு அழகு, கம்பீரம் என்பது அவர்கள் கருத்து. மீசையை பிடிக்கும் சில பெண்களுக்கு தாடி பிடிப்பதில்லை, ஆனால் கருத்து கணிப்புக்களின்படி பல பெண்களுக்கு தாடி பிடிக்கிறது.

**உடை அலங்காரம் :-** பொதுவாக பெண்கள் தங்கள் உடை அலங்காரத்திற்கு அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள், அதனால் ஆண்களிடமும் அந்த பழக்கத்தினை எதிர்பார்க்கிறார்கள்.

**பேச்சு திறன் :-** முதன் முறையாக ஒரு பெண்ணிடம் பேசும் போது, லொட லொட வென சொந்த கதை, சோக கதை எல்லாம் பேசக்கூடாது. அதே சமயம் அந்த பெண்ணிடமும் அவளை பற்றிய சொந்த விடயங்களை கேட்க கூடாது.


இவை அனைத்தும் பல பெண்களின் சில சில எதிர்பார்ப்புகளே, ஏற்கனவே சொன்ன மாதிரி எதிர்பார்ப்புகளும் , ஆசைகளும் பெண்ணுக்கு பெண் வேறுபடும்.

# லிப்ஸ்டிக்

முக அழகை வெளிப்படுத்த பெண்கள் அதிக அக்கறை எடுப்பார்கள். கண் இமைகளை அலங்கரிப்பதிலும், உதடுகளை அலங்கரிக்கவும் ஆர்வம் இருக்கும்.

உதடுகளை சரியாக பராமரிக்காவிட்டால் தோல் உரிந்தும், வறண்டும் காணப்படும். இதே போன்ற பிரச்சினை இல்லாமல் உதடுகளை பராமரிக்க பெண்களுக்கு பல வழிகள் உள்ளன.

வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் மென்மையாக மாறும்.



உதடுகளை கடிக்கும் பழக்கம் சிலருக்கு இருக்கும் அவ்வாறு உதட்டை கடிப்பதால் உதடு வறண்டு, நிறம் மாறி காணப்படும் எனவே உதட்டை கடிக்கும் பழக்கத்தை தவிர்க்க வேண்டும்.

லிப்ஸ்டிக் போடும் போது மிக கவனம் தேவை சக நண்பர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்கை பகிர்ந்து போடக்கூடாது. அவ்வாறு உபயோகித்தால் மற்ற பெண்களிடம் இருந்து ஏதாவது தொற்று கிருமிகள் பரவும். தரமான லிப்ஸ்டிக்கை பயன்படுத்த வேண்டும். தரமில்லாத லிப்ஸ்டிக்கை பயன்படுத்தினால் உதடுகள் கறுப்பாக மாறும்.



# சருமம் பராமரிப்பிற்கு

சருமத்தின் பளபளப்பை அதிகரிக்க, 2 கரண்டி அப்பிள் , 1/2 கரண்டி பால், 1/2 கரண்டி பார்லி பவுடர் பால் கலந்து முகத்தில் தேய்த்து வர முகம் மென்மை பெறும்.

அப்பிள் , தக்காளி விழுது, தர்பூசணி மூன்றையும் சம அளவு எடுத்து பஞ்சில் முக்கி முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசமாகவும் குளிர்மையாகவும் இருக்கும்.

அப்பிள் சாறு, வெந்தயத் தூள், சீயக்காய்த்தூள் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து தலைக்கு தேய்த்து அலசினால் முடி பிசுபிசுப்பு நீங்கிவிடும்.

# தீபாவளி சமையல் ஸ்பெசல்

# தக்காளி பிரியாணி



மதிய வேளையில் எப்போதும் சாம்பார், பொரியல், குழம்பு என்று சாப்பிட்டு அலுத்துவிட்டதா? அப்படியெனில் தக்காளி பிரியாணி செய்து சாப்பிடுங்கள். இதை செய்வது மிகவும் சுலபமானது மட்டுமல்லாமல், வீட்டில் உள்ளோர் அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் சுவையாக இருக்கும். இப்போது அந்த தக்காளி பிரியாணியை எப்படி செய்வதென்று பார்ப்போம். அதைப் படித்து செய்து சுவைத்து, எப்படி இருந்ததென்று எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்**

பழுத்த தக்காளி - 6
பாசுமதி அரிசி 1/2 கிலோ
நெய் - 2 கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 கரண்டி
மிளகாய் தூள் - 1 கரண்டி
கரம் மசாலா தூள் - 1 கரண்டி
அன்னாசிப்பூ - 2
பிரியாணி இலை - 1
பச்சை மிளகாய் - 3
பெரிய வெங்காயம் - 2
இஞ்சி, பூண்டு - 2 கரண்டி
கொத்தமல்லி - 2 கரண்டி
உப்பு - தேவையான அளவு
பட்டை, கராம்பு, ஏலக்காய் - 2

**செய்முறை**

அரிசியை நீரில் ஊற வைத்து, 1 முறை மட்டும் நீரில் கழுவி, தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சட்டியை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், பட்டை, கராம்பு, ஏலக்காய், அன்னாசிப்பூ மற்றும் கசக்கிய பிரியாணி இலை ஆகியவற்றை சேர்த்து வதக்க வேண்டும். பின்னர் அதில் வெங்காயத்தை சேர்த்து நன்கு பொன்னிறமாக வதக்க வேண்டும். அத்துடன் இஞ்சி, பூண்டு பேஸ்ட், முழு பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்கவும் அடுத்து அதில் தக்காளியை சேர்த்து வதக்கி, அதோடு சிறிது உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள், கரம் மசாலா சேர்த்து நன்கு கிளறி விட வேண்டும். தக்காளியானது நன்கு மென்மையாக வதங்கியதும், தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, அதோடு நறுக்கிய கொத்தமல்லி மற்றும் புதினா சேர்த்து நன்கு கொதிக்க விட வேண்டும். பின்பு அதில் அரிசியை சேர்த்து, தேவையான அளவு உப்பு தூவி மூடி சிறிது நேரம் விட்டு இறக்கினால், தக்காளி பிரியாணி ரெடி!






வீரம் வெற்றியை அடுத்து அஜித் சிவா கூட்டணி இரண்டாவது முறையாக இணைந்துள்ள வேதாளம் படத்தின் படப்பிடிப்புக்கள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. ஏ.எம்.ரத்னம் தயாரித்து வரும் இப்படத்தில் அஜித்துடன், ஸ்ருதிஹாசன், லட்சுமி மேனன், தம்பிராமையா, சூரி, கபீர் சிங், வித்யூலேகா உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர்.

வேதாளம் படத்தின் பிளாசாபேக் காட்சியில் அஜித் மொட்டைத்தலை கெட்டப்புடன் வருவார் என்று கூறுகின்றனர். மேலும் இந்தப் படத்தில் அஜித் நல்லவன் மற்றும் தீயவன் என்று இருவேறு விதமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

இப் படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். ஸ்ருதிஹாசன் இப்படத்தில் பாடல் பாடியுள்ளார். "வேதாளம்" படத்தின் இசையை அனிருத் பிறந்த நாளான அக்டோபர் 16ம் தேதி வெளியிட இருந்தார்கள். எனினும் அனிருத் பிறந்த நாள் பரிசாக 15 ஆம் திகதி ஆடம்பர நிகழ்வுகள் எதுவுமின்றி பாடல் வெளியிடப்பட்டது.

"வேதாளம்" படத்தின் பாடல்கள் பட்டிதொட்டியெங்கும் பட்டையை கிளப்பி வருகின்றது. இந்நிலையில் இந்த படத்தின் டிரைலர் 22ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 12 மணிக்கு சாய்பாபா சென்டிமென்ட் படி வெளியாகியது.

இந்நிலையில் இப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தீபாவளி நவம்பர் 10 அன்று வருகிறது.

என்னதான் தீபாவளியாக இருந்தாலும் செவ்வாய்கிழமை என்பது திரையுலகினருக்கு ராசியில்லாத கிழமை. எனவே, வேதாளம் படத்தை தீபாவளிக்கு ஐந்து நாட்கள் முன்பே அதாவது நவம்பர் 5 ஆம் தேதி வியாழக்கிழமையே வெளியிடலாமா என்ற ஆலோசனையில் இருக்கிறாராம் தயாரிப்பாளர்


நவம்பர் 5ம் திகதி வெளியிட்டால் தீபாவளியை முன்னிட்டு தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் படத்தின் வசூல் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கபடுகிறது.

# இஞ்சி இடுப்பழகி

இஞ்சி இடுப்பழகி படத்திற்காக ஏற்றிய உடல் எடையை பாகுபலி 2 படத்திற்காக குறைக்க அமெரிக்கா சென்றுள்ளாராம் அனுஸ்கா

இஞ்சி இடுப்பழகி படத்திற்காக பூசணி போன்று இருந்த அனுஸ்கா கண்டமேனிக்கு சாப்பிட்டு உடல் எடையை கூட்டினார். யோகா டீச்சரான அவர் உடல் எடையை அதிகரிக்க யோகா, ஜிம் ஆகியவற்றை கைவிட்டார். விளைவு படத்திற்கு ஏற்றது போன்று சூப்பராக குண்டானார்.





படத்திற்காக குண்டாகி புஸ்என்று ஆகிய அனுஸ்காவை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியப்பட்டனர். அனுஸ்கா தான் லேடி விக்ரம் என்றார்கள்.

பாகுபலி 2 படத்தில் நடிக்க உடல் எடையை குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் அனுஸ்கா. அதுவும் விரைவாக குறைக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

உடல் எடையை விரைவில் குறைக்க அனுஸ்கா அமெரிக்கா சென்றுள்ளாராம். யோகா, உடற்பயிற்சி செய்து இயற்கையான முறையில் உடல் எடையை குறைக்க விரும்பிய அவர் கால அவகாசம் இல்லாததால் அமெரிக்கா பறந்துள்ளாராம்.

பாகுபலி சூப்பர் டூப்பர் ஹிட் ஆகியுள்ளது. அடுத்து வெளியான ருத்ரமா தேவியும் ஹிட் இப்படி அடுத்தடுத்து ஹிட் கொடுத்த சந்தோசத்தில் உள்ளார் அனுஸ்கா.

இஞ்சி இடுப்பழகி படத்திற்காக அவர் 20 கிலோவுக்கு மேல் தனது உடல் எடையை கூட்டினார். அதே படத்தில் அவர் உடல் மெலிந்தும் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொந்தக் குரலில் பேச ரொம்ப நாளா ஆசை



ஆரம்பகாலத்தில், சொந்த குரலில் பேசினால் தான் சினிமாவில் நடிக்க முடியும் என்ற கட்டாயம் இருந்தது. பின்னர் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் திரைத்துறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் காரணமாக பேசத் தெரியாதவர்களும் வாய் அசைத்தால் போதும் எந்த மொழி படங்களிலும் நடிக்கலாம் என்ற நிலை வந்தது.

தமிழ் படங்களில் நடிப்பதற்காக தெலுங்கு, இந்தி, மலையாளத்தில் இருந்து நடிகைகள் வந்ததால் அவர்களுக்கு டப்பிங் குரல் கொடுக்கப்பட்டு வருகிறது. நன்றாக தமிழ் தெரிந்த நடிகைகளும் யாரையாவது டப்பிங் பேச சொல்லிவிட்டு எஸ்கேப் ஆகிக் கொண்டு இருந்தனர்.

இப்போது காலம் மீண்டும் மாறிவிட்டது. சொந்தக் குரலில் பேசினால் தான் உணர்ச்சி பூர்வமாக இருக்கும் என்று ஏற்கனவே கமல் கூறி வந்தார். இப்போது தமிழில் முன்னணி நடிகைகளாக இருக்கும் 5 பேர் தங்கள் படத்தில் சொந்த குரலிலேயே பேசுகிறார்கள்.

திரிசா ஏற்கனவே என்னை அறிந்தால் படத்தில் சொந்த குரலில் பேசி இருந்தார். இப்போது கமலுடன் நடித்துள்ள தூங்காவனம் படத்திலும் சொந்த குரலில் பேசி இருக்கிறார். தொடர்ந்து பேசவும் முடிவு செய்துள்ளார்.

இதுவரை டப்பிங் குரலை நம்பி இருந்த நயன்தாரா நானும் ரௌடிதான் படத்தில் சொந்த குரலில் பேசி பாராட்டு பெற்றுள்ளார். அவரும் இனி எல்லா தமிழ் படங்களிலும் சொந்த குரலில் பேச முடிவு செய்து இருக்கிறார்.

10 எண்றதுக்குள்ள படத்தில் சமந்தா சொந்த குரலில் பேசி இருக்கிறார். சுருதிஹாசனும் தனது படங்களில் சொந்த குரலில்தான் பேசுகிறார். லட்சுமிமேனனும் சொந்த குரலில் பேசி வருகிறார். நடிகைகள் சொந்த குரலில் பேசுவதற்கு மவுசு இருப்பதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று

# லாரன்சுடன் ஜோடி சேரும் நிக்கி கல்ராணி



சமீபத்தில் லாரன்ஸ் நடிப்பில் வெளியான காஞ்சனா 2 படம் சூப்பர் ஹிட்டானது. அவர் இயக்கிய முனி, காஞ்சனா ஆகிய வெற்றி படங்கள் வரிசையில் காஞ்சனா 2 படமும் அமைந்தது. பேய் படமாக வெளியான இப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்கப்பட்டது. பேயாக நடித்து வந்த லாரன்ஸ் தற்போது முதல் முறையாக போலீஸ் வேடத்தில் நடிக்க இருக்கிறார்.

ஜீவா நடிப்பில் வெளியான "சிங்கம் புலி" படத்தை இயக்கிய சாய் ரமணி இயக்க இருக்கும் புதிய படத்தில் நடிக்க லாரன்ஸ் ஒப்பந்தமாகியிருக்கிறார். பொலீசாக நடிக்கும் லாரன்சுக்கு ஜோடியாக நிக்கி கல்ராணி நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.



நிக்கி கல்ராணி, ஜி.வி. பிரகாஸ் நடிப்பில் வெளியான டார்லிங் படத்தில் பேயாக நடித்தவர். தற்போது இவரது நடிப்பில் கோ 2 படம் வெளியாக இருக்கிறது.

லாரன்ஸ் நிக்கி கல்ராணி ஜோடியாக நடிக்க இருக்கும் படம் முழுமையான பொழுதுபோக்கு படமாக உருவாக்க இருக்கிறார்கள். இப்படம் பற்றிய முழு விவரங்களை விரைவில் அதிகாரப்பூர்வமாக படக்குழுவினர் அறிவிக்கவுள்ளார்கள்.

# அதிக சம்பளம்



ஸ்ருதிஹாசன், காஜல் அகர்வால், அனுஷ்கா, தமன்னா ஆகிய மூன்று ஹீரோயின்களும் மற்ற ஹீரோயின்களை விட முன்னணியில் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கெல்லாம் லட்சங்கள் மட்டுமே கிடைத்திருக்க இவர்கள் மட்டும் கோடியைத் தாண்டியிருக்கிறார்கள்.

# விருதுகளை விட மக்களின் மனங்களில் எமக்கு கிடைக்கின்ற ஆதரவே போதும்

நேர்கண்டவர் : குணா



இசை என்பது ஒவ்வொரு இதயங்களின் துடிப்பாகும் மனதிற்கு மகிழ்ச்சியை கொடுக்கும் உணர்வை தரும் ஒருகலை. அந்த வகையில் இதுவரையில் 24இசை தொகுப்புகளும் 21 தமிழ் குறும்படங்களுக்கும், சுமார் 250 பாடல்களுக்கு மேல் இசையமைத்துள்ள இலங்கையின் முன்னணி இளம் இசை அமைப்பாளர்களில் ஒருவராகவும் இன்று உலகம் முழுவதும் தனது பாடல் மூலம், உலக வானொலிகளிலும் தனக்கென தனி இடத்தை பிடித்திருப்பவரும் தென்னிந்திய கலைஞர்களையே திரும்பி பார்க்க வைத்த எமது நாட்டின் இசை அமைப்பாளரும் இசை இளவரசன் என்ற விருதை பெற்ற வவுனியா மண்ணை சேர்ந்த இசை அமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் அவர்களிடன் தாய் வீடு இதழுக்காக ஓர் சந்திப்பு.

**இசைத்துறையின் உங்கள் ஆரம்பம் பற்றி சொல்லுங்கள்?**

என்னுடைய சொந்த இடம் யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு, அப்பாவின் தொழில் நிமித்தம் காரணமாக ஏழு வயதிலேயே வந்தாரை வாழவைக்கும் வவுனியா மண் என்னையும் வரவேற்று கொண்டது. நான் சிறு வயது முதல் உயர்தரம் வரை கல்விகற்றது வவுனியா விபுலானந்த கல்லூரியில் சிறுவயதில் இருந்து பாடும் திறமை தானாக என்னிடம் வளர்ந்தது. காரணம் எனது தந்தையார் ஒரு பாடகர், நடிகர் ஆரம்ப காலங்களில் பல மெல்லிசை பாடல்களை இலங்கை வானொலியில் பாடியுள்ளார். பல மேடைக் கச்சேரிகள் செய்து வந்தவர். இதே போன்று எனது மாமா கீழ் கரவை கி.குலசேகரன் இலங்கையில் பிரபல கவிஞர் பல பாடல்களை எழுதியவர். எனது அம்மாவின் சகோதரர்களும் அப்பாவின் சகோதரர்களும் சிறந்த இசை கலைஞர்கள் இவ்வாறான இசை குடும்ப பின்னணியில் எனக்கும் இசைமீதான ஆர்வம் தானாகவே உருவானது.

**சங்கீதத்தை முறையாக கற்றுக் கொண்டீர்களா?**

முறைப்படி என்று சொல்ல முடியாது. பாடும் திறமை ஏற்கனவே என்னிடம் சிறுவயது முதல் தானாகவே இருந்தது. அந்த திறமையை முதன்முதல் கண்டறிந்து என்னை பாடசாலை மட்டத்தில் மாணவர் மன்றத்தில் முதன் முதல் அரங்கேற்றியவர் எனது ஆசிரியை திருமதி சாந்தி பரமேஸ்வரன். அதன் பின்னர் திருமதி மனோரஞ்சனி ,திருமதி ஜெகநாதன் ,திருமதி சி.தம்பரநாதன் ஆசிரியர்கள் பாடசாலைக் காலத்தில் எனக்கு சங்கீதத்தை கற்பித்தார்கள். உயர்தரம் படிக்கும் போது சங்கீதத்தையும் ஒரு பாடமாக எடுத்து திருமதி சிதம்பரநாதன் ஆசிரியரிடம் இசையைக் கற்றுவந்தேன்.

**இசை அமைக்கும் ஆற்றல் எப்படி? உங்களிடம் உருவானது? இதை முறைப்படி கற்றுக் கொண்டீர்களா?**

இது ஒரு சுவாரசியமான அனுபவம் உண்மையில் இசை அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னிடம் ஆரம்பத்தில் இருந்ததில்லை. இசைகுழுக்களில் பாடல் பாட வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் நிறையவே இருந்தது. ஆனால் எனக்கு எதுவித சந்தரப்பங்களும் கிடைக்கவில்லை. அந்த ஒரு தாக்கம் தான் என்னை இசை அமைப்பாளராக்கியது என்று சொல்லலாம். என்னுடைய மாமா கருணாகரன் முதன்முதல் சிறிய கீபோர்டு ஒன்றை எனது பிறந்தநாளுக்கு பரிசளித்தார் அது மிகவும் சிறியது. அந்த கீபோர்டு நானாகவே வாசிக்க பழகிக்கொண்டேன். அதன் பிறகு எனது சித்தப்பா மதியழகன் வெளிநாட்டில் இருந்து வரும் போது ஒரு கீபோர்ட் ஒன்றினை தனது மகளுக்காக வாங்கி வந்தார். நான் சிறிய கீபோர்டில் வாசிப்பதை பார்த்து மகிழ்ச்சியில் மகளுக்காக வாங்கிவந்த கீபோர்ட்டினை எனக்கு பரிசளித்தார். அந்த கீபோர்ட்ல் வாசிக்க தொடங்கி பின்னர் சிறிய இசை குழு ஒன்றை ஆரம்பித்து ஜோன் கெனடி ஆசிரியர் மூலம் முதன் முறையாக எமது இசை குழு வவுனியா மாவட்ட சிறுவர் தின விழாவில் அறிமுகமானது. அதன் பின்னர் ராகஸ்வரம் என்ற பெயரில் எமது இசைகுழு வவுனியாவில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் இன்று வரை இசை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறோம்

**முதன் முதலாக நீங்கள் இசை அமைத்த பாடல் பற்றிய அனுபவத்தை சொல்லுங்கள்?**

முதன் முதலாக இசை அமைத்த பாடல் “மனமே கோபமா” ஏ. ராஜேந்திரா எழுதிய பாடல் ஆரம்பத்தில் ஒலிப்பதிவு வசதிகள் வவுனியா மாவட்டத்தில் எங்கும் இல்லை. ஆனால் கணனி மூலம் ஒலிப்பதிவு செய்யலாம். என்று பலர் கூறுவதை கேட்டு அறிந்திருந்தேன். இதை கண்டு பிடிப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் பல முயற்சிகள் செய்தேன். இறுதியாக ஒரு நண்பனின் உதவியோடு ஆ3 மிக்சர் என்றமென்பொருள் உதவியோடு இந்த பாடலை ஒலிப்பதிவு செய்தோம். சூரியன் வானொலியின் பாடுவோர் பாடலாம் நிகழ்ச்சியில் எமது இசைக்குழு விமல் மூலமாக சூரியன் வானொலியில் அறிமுகப்படுத்தபட்ட நேரம் அப்போதைய சூரியன் வானொலியின் பணிப்பாளர் லோசனிடம் எமது பாடலை கொடுத்தோம். அந்த பாடலை கேட்ட அவர் உடனடியாக சூரியன் வானொலியில் ஒலிபரப்பு செய்தார். இந்த நிகழ்வே தொடர்ந்தும் எம்மை பாடல்கள் உருவாக்கும் பணியில் தொடர்ந்து பட்டாம் பூச்சி, சிக்குபுக்கு ரயிலே போன்ற பிரபலமான பாடல்கள் உருவாக்க காரணமாக அமைந்தது

**இசை துறையின் பரிணாம வளர்ச்சியில் இன்று கணணித் துறை அதிக செல்வாக்கு செலுத்துகிறது இது பற்றிய உங்கள் கருத்துகள்?**

ஆரம்பகாலத்தில் இசைஞானி இளையராஜா, எம்.எஸ்.விஸ்வநாதன் போன்ற இசை ஜாம்பவான்கள் கணனியின் துணை இன்றி இசை அமைத்தார்கள் இது யாவரும் அறிந்ததே. என்னை பொறுத்தவரை கூறுவதானால் கணணி மூலம் நாங்கள் செய்கின்ற வேலைகளை இலகுவாகவும் ஒலித்தரம் சிறப்பாகவும் செய்து கொள்கிறோம். நாங்கள் எதை நினைக்கின்றோமோ அதை இலகுவாக செய்ய முடிகின்றது. ஆனால் ஒன்று இசை அமைக்கும் கலைஞரிடம் கணணி அறிவைவிட இசை அமைக்கும் அவரது சொந்த திறமை, அவரது புதிய சிந்தனைகள் இருந்தால் மட்டுமே பாடல் வெற்றி பெறும்.

**இசை இளவரசர்கள் நிகழ்ச்சியில் இசை இளவரசர் விருது பெற்றீர்கள் அது பற்றி?**

என்னுடைய இசைத் துறை வளர்ச்சியில் மறக்கமுடியாத அனுபவம் தான் இசை இளவரசர்கள் நிகழ்ச்சி இரண்டு வருடங்களாக நடைபெற்றது. பருத்திவீரன் திரைப்பட இயக்குனர் அமீர் கூறிய காட்சிக்கு இசையமைத்தேன் தேவதையே என்கின்ற ஒரு தாய் பாடல் இப்பாடலை மனோஜ் மற்றும் லீலா ஆகியோர் பாடினார்கள் ஜோசப் இப்பாடலை எழுதினார். இலங்கை தமிழ் இசை துறையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்திய பாடல் அது லட்சகணக்கான வாக்குகளால் இலங்கையில் முதலிடம் பெற்ற பாடலானது இப்பாடல். அதற்குப் பினனர் அவ்வாறான வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை கிடைத்திருந்தால் இன்னும் என்னுடைய திறமையை வெளிப்படுத்தி இருப்பேன்.

**இலங்கை ஊடகங்கள் உங்களுடைய பாடல்களுக்கு எவ்வாறு ஆதரவு வழங்குகிறார்கள்?**

ஆரம்ப காலங்களில் வானொலிகள் தான் என்னை ஊக்குவித்தன. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. தென்னிந்திய பாடல்களுக்குத் தான் அதிக அளவில் ஆதரவை வழங்குகிறார்கள் அதுமட்டுமல்ல நாங்கள் எதுவித வசதிகளும் இல்லாத பிரதேசங்களில் இருந்து கொண்டு ஒரு பாடலை உருவாக்குவதற்கு படும் துன்பம் அவர்களுக்கு புரிவதில்லை சில வானொலிகள் கடமைக்காக ஒருதடவை பாடலை ஒலிபரப்பிவிட்டு அதை புறம் தள்ளி விடுகிறார்கள். இவ்வாறான செயல்பாடுகளால் சில வேளைகளில் இசை துறையே வேண்டாம் ஒதுங்கி விடலாம் என்று கவலைப்பட்டதும் உண்டு. இன்றைய இலங்கை தமிழ் கலைஞர்களின் நிலை இது மாற வேண்டும் இலங்கை இசைத் துறை மிளிர வேண்டும். எமது பாடல்களுக்கென்று எதிர்காலம் மலரவேண்டும். இதை யாவரும் உணரவேண்டும்

**உங்களுக்கு இதுவரை கிடைத்த விருதுகள் பற்றி சொல்லுங்கள்?**

இதுவரையில் எனக்கு கிடைத்த விருதுகள் இசை இளவரசர் விருது, (Shakthi tv), இசை சுடர் விருது, வவுனியாவின் இசை மைந்தன், இளம்கலையோதி, இசையூற்று, இசை வித்தகர் போன்ற விருதுகள் கிடைத்தன. இதுவரை சிறந்த இசையமைப்பாளர், பாடகருக்காக இலங்கை அரசின் அரச தேசிய இசை விருது நான்கு முறை கிடைத்துள்ளது. சிறந்த பாடகருக்கான சுடர் விருது, சிறந்த இசையமைபாளருக்கான வேல் சினிமா பட்டறை விருது. விருதுகளை விட மக்களின் மனங்களில் எமக்கு கிடைக்கின்ற ஆதரவு ஒன்றே போதும்.

**இணையத்தளங்கள் ஊடான உங்கள் இசைத் துறை வளர்ச்சி பற்றி?**

ஈழத்தில் முதன் முறையாக இணையத்தளம் மூலமாக பல பாடல்களை வெற்றி அடைய செய்தேன். புலம்பெயர் தேசத்து உறவுகளும் லட்சக்கணக்கான ரசிகர்கள் எமது பாடல்களை பார்த்துள்ளனர். அந்த வகையில் யாழ்தேவி, காந்தள் பூக்கும், எங்கோ பிறந்தவளே, சுண்டுக்குளி பூவே போன்ற பல பாடல்கள் இறுதியாக வெளியிட்ட தந்தையின் தாலாட்டு பாடல்வரை எமக்கு பெயரை பெற்று தந்தன. இந்த வருடத்தில் 7 பக்தி இசை தொகுப்புகள் ஈறாக 72பக்தி பாடல்கள் எனது இசையில் வெளிவந்துள்ளன. ஈழத்தின் பிரபல பாடகர்கள் எல்லோரும் எனது இசையில் பாடியுள்ளனர்.

**வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

உங்கள் திறமையை மட்டும் நம்புங்கள் மற்றவனை பார்த்து போட்டி போடுங்கள் பொறாமை கொள்ளாதீர்கள். எப்பொழுதும் சோர்ந்து விடாதீர்கள் முயற்சி நாளை வெல்லும். ■



# தமிழ் அரசியல் தலைமைகள் தவறவிட்ட தருணங்கள்

ஐ. இலக்கியா

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு, ஈழத் தமிழர்கள் மேய்ப்பன் இல்லா மந்தைகளாக்கப் பட்டனர். உயிரிழப்புக்களையும் உடமை இழப்புக்கள் என வாழ்க்கையைத் தொலைத்து விட்டு தெருவிலே நின்று மக்களைப் பயன்படுத்தி தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் தம் அரசியல் நடவடிக்கைகளை செவ்வனே செய்தார்கள்.

எடுப்பார் கைப் பிள்ளையாய் ஈழத் தமிழனின் நிலை உருவாக்கப்பட்டது. இந்நிலையில் ஆரம்பத்தில் இருந்தே தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையில் லாமல் ஒவ்வொரு குழுக்களாக, இயக்கங் களாக, அரசியல் கட்சிகளாக பரிணாமம் அடைந்தவர்கள் எல்லாம், இரா சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சிக்குள் கூடினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற கட்சி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் ஆயுதப் போராட்டத்தால் மட்டும் சாதிக்க முடியாது அரசியல் ரீதியிலும் தீர்வுகளை எட்ட வேண்டும் என்று, அன்றே புலிகள் நினைத்தமையினால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அங்கீகரித்தனர்.

2009 ஆம் ஆண்டு வரை "இருக்கிறான் என்றாலும், இல்லை தான் என்றாலும், இருக்கும் அவன் மீது ஒரு பயம்" என்று கவிஞர் பா. விஜய் கூறியது போன்று தமிழர்களுக்கு துரோகம் நினைக் கின்ற தமிழர்களும், சிங்களவர்களும் தமிழர் களின் தலைவனை நினைத்து, தம் உயிரை நினைத்து நிதானித்து விடுவார்கள். ஆனால், இன்று மேய்ப்பன் இல்லாத மந்தைகள் தானே என்று எல்லோரும் தமிழர்களுக்கு துரோகத்தை மாத்திரமே இழைக்கின்றார்கள்.

நிர்க்கதியாக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான தலைமைகள் முழக்கமிட்டன. இந்த முழக்கம் தமிழ் மக்கள் மனதுகளில் மீண்டும் ஒரு நம்பிக்கையை ஊட்டியது. அந்த நம்பிக்கையே 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பிரதிபலித்தது. ஆயினும் இன்று வரை ஒவ்வொரு ஈழத் தமிழன் மனதிலும் பெருநெருப்பாய் இருக்கின்ற எண்ணங்களில் ஏதாவது ஒன்று கூட நிறைவேறவும் இல்லை. யாரும் நிறைவேற்றவும் இல்லை. ஆனால், எங்களுக்கு கிடைத்த ஏராளமான தருணங் களை எம் தமிழ் அரசியல் தலைமைகள் தவற விட்டுள்ளனர் என்றே கூற வேண்டும்.

### தமிழ் மக்கள் தலைமைகளை நம்பினார்கள்

21 செப்டெம்பர் 2013 ஆம் ஆண்டு அன்று யாழ்ப்பாண மன்னர் காலத்தில் தமிழர்களுக்கு என்று ஓர் அரசு நிறுவப்பட்டதனைப் போன்று இன்றும் தமிழர்களுக்கு என்று ஓர் அரசு நிறுவப்பட இருக்கின்றது. இவ்வரசில் அரசியல் அனுபவசாலிகளும், தமிழினப் போராட்ட வடுக்களும், வலிகளும் தெரிந்தவர்களும், சட்டத்தில் பாண்டித்தியம் பெற்றவர்களும், தம் கூட்டுப் பாண்டித்தியத்தால் தமிழர்களுக்கு சுதந்திர வாழ்வியல் ஒன்று பிறக்கும் தமிழர்கள் தங்களைத் தாங்களே நிர்ணயிக்கக் கூடிய தகுதிகளை இவர்கள் பெற்றுக் கொடுப்பார்கள் என்கிற முழு நம்பிக்கையில் ஈழத் தமிழர்கள் யாவரும் தமது ஒட்டு மொத்த ஒற்றுமையினையும் பலத்தினையும் 2009 இன் பின்னரும் மீண்டும் ஒரு முறை சிங்கள அரசுக்கு தன் சிறகை விரித்துக் காட்டியது. இது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் தலைமைகளை நம்பினார்கள் என்பதை மட்டுமே வெளிப்படுத்துகின்றது.

### ஜனாதிபதித் தேர்தல்

08 ஜனவரி 2015 அன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவும் அன்று அவரின் அமைச்சரவையில் முக்கிய இடத்தில் இருந்த மைத்திரிபால சிறிசேனவும் நேருக்கு நேர் களத்தில் மோதிக் கொண்டனர். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆள் மாற்றம் ஒன்று தேவை என்பதனை உணர்ந்த தமிழ் பேசும் மக்கள் மீண்டும் ஒற்றுமையாகச் சேர்ந்து இன்னொரு பாரிய மாற்றத்தையும் ஏற்படுத்தினார்கள். ஒரு நாட்டுக்குள் இருக்கின்ற சிறுபான்மையினம் அந்த நாட்டின் தலையெழுத்தினையே மாற்றும் சக்தியினைக் கொண்டிருந்தமையைக் கண்டு சர்வதேசமே திரும்பிப் பார்த்தது. ஆயினும், யார் ஆட்சிக்கு வந்தாலும் அமையப் போகும் சிங்கள இனவாத அரசு தமிழர்களுக்காக அரிசி விலையைக் குறைக்க உடன்பட்டாலும், தமிழ் பேசும் மக்களுக்கு நீதியான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வராது என்பதனை யாவரும் அறிவர். ஆயினும் அன்றொரு வாய்ப்பு தமிழர்களுக்கு கிடைத்திருந்தது. இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 51 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றால் மாத்திரமே அவர் சனாதிபதியாக முடியும். 51 வீதத்திலும் குறைவடைந்தால் போட்டியிடும் இன்னொரு நபரின் துணை கொண்டு 51 வீதத்தை அடையலாம். இம்முறை, சனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் சேர்ந்து தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு வாக்களித்து இருந்தால், இந்த சிங்கள வேட்பாளர் 51 வீதத்தை எட்டுவதற்கு பெரும் பிரயத்தனப் படவேண்டி இருந்திருக்கும். அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்து இருந்தால், அந்த தமிழ் வேட்பாளர் தமிழ் மக்களுடைய முக்கியமான பிரச்சினைகளைப் பேரம் பேசி ஒரு அரசை அமைத்து இருக்கலாம். இது நன்றாகத் தெரிந்திரிந்தும், ஏன் எமது தமிழ்த் தலைமைகள் இது குறித்து யோசிக்கவில்லை.

### நாடாளுமன்றத் தேர்தல்

17 ஒகஸ்ட் 2015 அன்று நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் தேசியப்பட்டியல் அடங்கலாக மொத்தம் 16 ஆசனங்களைப் பெற்று இருந்தனர். தமிழ் மக்கள் இப்பொழுதும் இந்த தமிழ்த் தலைமைகள் மீது வைத்த நம்பிக்கைகளை இழக்கவில்லை என்பதனைத் தான் இது காட்டுகின்றது. இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நினைத்த இலக்கை அடையவில்லை என்பதையும் நாம் இங்கே நிச்சயம் சுட்டிக் காட்ட வேண்டும். இந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ 96 ஆசனங்களை தன்வசம் கொண்டிருந்தார்.

இந்த தமிழ்த் தலைமைகள் இந்த மஹிந்தவுடன் நிபந்தனைகளற்று காணி விடுவிப்போ அல்லது முன்னாள் போராளிகள் விடுவிப்போ என ஏதாவது ஒன்றைப் பேரம் பேசி, தம் ஆசனங்களை கொடுத்திருந்தால் கூட மீதி ஆசனங்களை மஹிந்த எப்படியேனும் பெற்று ஆட்சி அமைத்திருப்பார். ஆட்சி அதிகாரத்தில் மோகம் கொண்ட மஹிந்த தான் ஜனாதிபதி ஆக வேண்டும் என்கின்ற ஆசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன கேட்டாலும் கொடுத்திருப்பார். அது மாத்திரமின்றி தொடர்ச்சியாக அவர் ஜனாதிபதியாக இருக்கின்ற போது முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு பொறுப்புக் கூறுகின்ற தன்மை அடிப்படையிலும் அவருக்கு கீழ் அவரை விசாரிக்க யாரும் இல்லை என்கிற அடிப்படையிலும் ஐ.நா உள்ளிட்ட சர்வதேசம் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கும். எந்த விதத்தில் பார்த்தாலும் தமிழர்களுக்கு ஒரு வித திருப்தியையும் தந்திருக்கும். ஆக மொத்தத்தில் இப்பொழுது தமிழர்களின் நிலை பொலிசுக்குப் பயந்த கள்ளன் கிராமசேவகர் வீட்டில் ஒளிந்த கதையாக முடிந்துவிட்டது.

## கிருபா லேணர்ஸின் காட்சிக்கோர் கவிதை

### பரிசுக்குரிய கவிதைகள்




1 எனக்கென்னமோ உங்களது கண்ணைப் பார்க்கும் போது
கழுகின் கண்களை பார்ப்பது போலவே தோன்றுகிறது. ஏனெனில்
எங்களுக்கு புத்தர் சிலை ஒரு அடக்குமுறையின் சின்னம் தான்

சசி - நுணாவில்

2 புத்தா எம் நாட்டில்
யுத்தம் எல்லாம் போச்சே!
உன் வழி வந்தோர் - இன்னும்
எம் வழி மறுப்பதேன்?

குணா - புன்னாலைக்கட்டுவன்

### அடுத்த இதழிற்கான போட்டிக் கவிதைக்கான படம்



இக்காட்சி தொடர்பான கவிதைகளை நான்கே வரிகளில் எழுதி தபாலட்டையில் மாத்திரம் அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி : தமிழ் சி.என்.என்
இல. 262, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழ் சி.என்.என் இயக்குனருக்கு சமூக சேவைக்கான கனடாவின் உயரிய விருது

தமிழ் சி.என்.என் இயக்குனரும், உலக பசியொழிப்பு மன்றத்தின் (Hunger Free World Foundation) நிறுவனருமான அகிலன் முத்துக்குமாரசாமி அவர்களும், தமிழ் சி.என்.என் இன் தலைவர் (கனடா), உலக பசியொழிப்பு மன்றத்தின் (Hunger Free World Foundation) தலைவர் (கனடா) வி.எஸ் துரைராஜா அவர்களும் மாண்புமிகு எலிசபெத் மகாராணியின் கனடா நாட்டின் ஒன்ராறியோவுக்கான அரசுப் பிரதிநிதியும், ஒன்ராறியோ மாகாணத்தின் மாண்புமிகு ஆளுநர் (Lieutenant Governor of Ontario) Elizabeth Dowdeswell அவர்களிடமிருந்து சமூக சேவைகளுக்கான இரண்டு விருதுகளினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

The national ethnic press and media council of canada வின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த 30/10/2015 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் ஒன்ராறியோ நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் சி.என்.என் இனைப் பிரதிநிதித்துவப் படுத்தி இருவர் உட்பட கனடாவில் பொதுச் சேவை உட்பட பல்வேறு சேவைகளிலும் திறமையாகச் செயற்பட்ட 11 பேருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டன.

சமூக சேவைக்கான விருதினைப் பெற்ற தமிழ் சி.என்.என் இயக்குனரும், உலக பசியொழிப்பு மன்றத்தின் (Hunger Free World



Foundation) நிறுவனருமான அகிலன் முத்துக்குமாரசாமி அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையில் எமது மக்களுக்கு ஏராளமான தேவைகள் இருகின்றன. அவர்கள் தம் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்கள் ஆகின்றனர். இது நீண்டகாலமாக என் மனதை உறுத்தியதன் வெளிப்பாடே நான் சமூக சேவைகளை செய்யத் தொடங்கினேன். மற்றவர்களையும் செய்யத் தூண்டினேன். ஆயினும் மக்களின் தேவைகளின் முன்னால் எனது சேவை மிகவும் குறுகியதாகவே காணப்படுகிறது.

என்னை ஒரு சமூக சேவகன் என இப்பொழுது தான் உலகம் இனங் கண்டிருக்கிறது. ஆனால் எனது மண்ணில் எனது உறவுகள் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

சமூக சேவை என்பது வெறும் புகழுக்கும் விருதுக்குமாக செய்யப்படுவது அல்ல அது ஆத்மார்த்த ரீதியில் மனித மனங்களை அறிந்து செய்யப்படுவது. அது சரியாகச் செய்யப்படும் போது அம் மனங்கள் வெல்லப்படுகின்றன" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோளோடு தோள் நின்று எம்மோடு சேவை புரிந்த அனைத்து இலத்திரனியல், அச்சு மற்றும் முக்கியமாக இணைய ஊடகங்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் இந்த விருதினை நான் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எங்கள் முன் செய்ய வேண்டிய ஏராளமான பணிகள் உள்ளன. அவற்றைக் காலம் தாழ்த்தாது மேற்கொள்ள அனைவரும் எம்மோடு இணைந்து பயணிக்க முன்வர வேண்டும். என்றார்.

தமிழ் சி.என்.என் சார்பில் கனடாவின் முக்கிய விருதுகளினைப் பெற்ற இருவரையும் தமிழ் சி.என்.என் குடும்பம் சார்பில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழ் சி.என்.என் இயக்குனரும், உலக பசியொழிப்பு மன்றத்தின் (Hunger Free World Foundation) நிறுவனருமான அகிலன் முத்துக்குமாரசாமி அவர்களின் சமூக சேவைகளைப் பாராட்டி இலங்கையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி ஆகிய பிரதேசங்களில் பட்டங்களும், விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



















## அணுக்குகள்



- அட்லாண்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்காவிலும் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.
- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழிதான்.
- கைரேகையைப் வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- இளஞ்சிவப்புப் புரட்சி என்பது மருந்து வகைகள் உற்பத்தியை பெருக்குவது
- நீலப் புரட்சி என்பது மீன் உற்பத்தியை பெருக்குவதும், வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியைப் குறிப்பது.
- மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவது.

## "கின்னஸ் புத்தகம்" எப்படி உருவானது தெரியுமா?




1951ம் வருடம் ஒரு நாள் மாலைப்பொழுது, அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கின்னஸ் வாட்சாலை என்ற அமைப்பிற்கு நிர்வாக இயக்குனராக இருந்தவர் "சர்க்யூ பீவர்". இவர் வேட்டையாடுவதற்காக ஒரு நதிக் கரையோரம் சென்று கொண்டிருந்தார். அப்போது ஆகாயத்தில் ஒரு நீண்ட கோடு போல ஏராளமான பறவைகள் பறந்து சென்று கொண்டிருந்தன. அவர், உடனே அவற்றை சுட எண்ணி, குனிந்து தனது இருந்த துப்பாக்கியை எடுத்தார். எடுத்து நிமிர்ந்தவர் அந்தப் பறவைக்கூட்டம் கண்ணுக்கே தெரியாத தொலைவுக்குச் சென்று விட்டதை அறிந்தார். வியப்பில் உறைந்து போனார். என்ன ஒரு வேகம் கோல்டன் பிளவர் என்ற பறவையினம் அவை.

அப்போது தான் அவருக்கு ஒரு சிந்தனை பளிச்சிட்டது. ஒருவேளை உலகிலேயே மிகவும் வேகமாகப் பறக்கும் பறவையினம் இவையாகத்தான் இருக்குமோ என்று எண்ணினார். பலரிடம் பல புத்தகங்களிலும் விடை தேடினார். இது குறித்து நாமே ஒரு புத்தகம் வெளியிட்டால் என்ன என்று யோசித்தார். அவர் உடனே லண்டன் சென்றார். அங்கு அரசாங்கத்திற்காக புள்ளி விவரங்கள் சேகரிக்கும் நோரிஸ் மைக் வைக்ட்டர், ரோஸ் மைக் வைக்ட்டர் என்ற இரட்டைச் சகோதரர்களைச் சந்தித்தார்.

தனது புதிய புத்தக யோசனையை தெரிவித்தார். அவர்களும் ஒத்துழைப்புதர முன்வந்தனர். மூவரின் உழைப்பில் பிறந்தது தான் கின்னஸ் புத்தகம். முதல் கின்னஸ் புத்தகம் 1955ம் ஆண்டு ஆகஸ்ட் 27ல் 198 பக்கங்களுடன் வெளியிடப்பட்டது. சாதனையாளரின் சாதனை பற்றிய பத்திரிகை செய்திகள், பார்வையாளர்களாக இருந்த பொறுப்பானவர்களின் கையெழுத்துத் தொகுப்பு, இவை உண்மைதான் என்று ஒரு பொறுப்பான நிறுவனத்தின் தலைவர் வழங்கும் உறுதிமொழி.

இவ்வளவும் அனுப்ப வேண்டும். புதிய சாதனை முந்தைய சாதனையை முறியடிப்பதற்காக இருந்தால் அந்தச் செய்தியும் சாதனையாளர் பற்றிய தகவலும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும். கின்னஸ் புத்தகத்தில் சாதனை நிகழ்ச்சிகளை வெளியிடுவார்களே தவிர, யாரையும் சாதனை புரியத் தூண்டமாட்டார்கள். கின்னஸ் புத்தகம் பற்றிக் கூட கின்னஸ் புத்தகத்தில் 1974ல் இடம் பெற்றது.

உலகிலேயே அதிகமாக விற்பனையான புத்தகம் என்ற வரிசையில் கின்னஸ் புத்தகம் இடம் பிடித்துள்ளது. முதன் முதலில் ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவந்த புத்தகம் பின்னர் 35 மொழிகளில் வெளியிடப்பட்டது. 1954ஆம் ஆண்டு முதன் முறையாக சாதனைகள் அடங்கிய புத்தகமொன்றினை ப்லீட் ஸ்ரீட் செய்தித்தாளுடன் இணைத்து இரட்டையர்களான நொரிஸ் மற்றும் ரோஸ் மெக்வேர்டர் விநியோகித்தனர்.

இவர்கள் 1000 பிரதிகளை அச்சிட்டு இலவசமாக வழங்கினர். இதற்கு அடுத்த வருடமே 1955ஆம் முதன் முறையாக அதிகாரபூர்வமான கின்னஸ் புத்தகம் (Guinness Book of Rcords) என்ற பெயரில் பிரித்தானியாவில் வெளியாகி பெரும் வரவேற்பினைப் பெற்றது.

அன்றிலிருந்து இன்று வரையில் 26 மொழிகளில் 100 இற்கும் அதிகமான நாடுகளில் 115 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. அதிகளவில் விற்பனையாகும் புத்தகம் மட்டுமன்றி அதிகளவில் திருடப்படும் புத்தகங்களிலும் கின்னஸ் புத்தகம் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது. உலகின் பல சாதனைகளை தாங்கி வரும் இப்புத்தகத்தின் 2014ஆம் ஆண்டிற்கான பதிப்பு இம்முறை கடந்த 12ஆம் திகதி வெளியானது.

## கண்ணதாசன் தத்துவங்கள்

- துன்பங்களை வளர்ப்பதும் தனிமை தான் தணிப்பதும் தனிமை தான்
- எதிரியின் கையில் உள்ள ஆயுதத்தை பார்த்து கேலி செய்வதைவிட அதை பிடுங்கிகொள்வது புத்திசாலித்தனம்
- காலம் போனால் திரும்புவதில்லை காசுகள் உயிரை காப்பதும் இல்லை
- பெண்கள் பூ போன்றவர்கள், மாமிசம் சாப்பிட்டு பழக்கப்பட்ட நாய்களுக்கு பூவை கையாள தெரியாது
- கட்டுக்காவல் எங்கே பலமாக இருக்கிறதோ, அங்கே தான் தாண்டி குதிக்கும் கால்களும் உறுதியாக இருக்கின்றன
- ஒன்று தவிர்க்க முடியாது என்னும் போது அதை எதிர்கொள்ளும் தைரியம் வந்துதானே தீர வேண்டும்.
- சித்தாந்தம் தோற்றுப்போன இடத்தில் வேதாந்தம் தானே கை கொடுக்கிறது?
- கோடையில் குளம் வற்றிவிட்டதே என்று கொக்கு கவலைப்படக் கூடாது மீண்டும் மழை காலம் வருகிறது. மழைக்காலம் வந்து விட்டதென்று நதிகுதிக்கக் கூடாது அதே வெயில்காலம் வந்து கொண்டிருக்கிறது.
- எதை வெட்டிவிட்டால் அடுத்த கேள்வி இருக்காதோ, அதை வெட்டிவிடுபவனே அறிவாளி.

தொகுப்பு : கவின்




## வரம் தருவாயா அம்மா

ஈரைந்து மாதம்
கருவினில் என்னைச் சுமந்து
உன் துன்பம் மறந்து
என்னை வளர்த்தாய்
நான் வளர்ந்து உன்னைப்
பார்க்க தவமிருந்தேன்
ஆயிரம் கனவுகளுடன்
உன்னைப் பார்த்திருந்தேன்
நான் அறியா வயதினில்
என்னை விட்டு வெகுதூரமாய்
போனாய் ஏனம்மா?
ஒரு முறையாவது
உன்னைப் பார்க்கும்
வரம் தருவாயா எனக்கு?
உன் அன்பை நான் உணர வேண்டும்
என் அம்மா



ஜெ.கௌசலா
கன்னாதிட்டி

NOPON KENSEN-KAI KARATE-DO
ASSOCIATION OF SRI LANKA

புதிய கராத்தே பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன




இடம் : வவுனியா நகரசபை மண்டபம்
காலம் : சனி - காலை 9.30
ஞாயிறு - காலை 8.30






கராத்தே போட்டிகளில் அதிக தங்கப் பதங்கங்களை வெல்லும் 4, 5, 6 வயதுச் சிறுவர்கள்.


ஆண், பெண் இரு பாலருக்கும் 4 வயது தொடக்கம் கராத்தே வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு

I.A.Asanar (Black Belt 6th Dan) T.P: 077 9678176
J.Nanthakumar (Black Belt 4th Dan) T.P: 077 4352757
C.Lesly Masal (Black Belt 3rd Dan) T.P: 077 6704761



P
பிறின்ஸ் ஹோட்டல்
SINCE 1981
பாரம்பரிய சைவ சுவை
PRINCE HOTEL
Home Delivery
0727406300
இல.169, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 406 300 | 0718 561 233





MRM City
CARSON MODEL SPORT
Rc/Cars Racing Jaffna
K.K.S Road, Mallakam
0779517813





P3
Phone Shop
Sales & Repairing
சகலவிதமான கைத்தொலைபேசிகளையும், உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் சிறந்த முறையில் கைத்தொலைபேசிகளை பழுதுபார்த்தும் பெற்றுக்கொள்ளலாம்
Chunnakam.
077 66 36 619 | 021 45 45 135







facebook

ஏன்டா, எல்லாப் பாடத்திலேயும் பெயிலாயிட்டியே உங்க அம்மா அடிக்க மாட்டாங்களா...?
ஐ அஸ்கு பிஸ்கு.... அடி வாங்குரதுக்காகத் தானே எங்கப்பா இருக்காரு!!!...


மனைவி : என்ன பார்த்துகிட்டு இருக்கீங்க
கணவன் : ஒண்ணுமில்லை!
மனைவி : ஒண்ணுமில்லாமயா ஒரு மணிநேரமா மேரேஜ் சா்டிபிகேட்ட பார்த்துகிட்டு இருக்கீங்க!
கணவன் : எங்கேயாவது எக்ஸ்பைரி டேட் போட்டிருக்கானு பார்க்கிறன்.


"மேடம்... என் மாமியாரை ஒரு வாரமா காணலை"...
"ஒரு வாரமா என்ன பண்ணீங்க"...?
"வேற வழியில்லாம ஒரு வாரமா என் நாத்தனாரோட சண்டை போட்டுட்டு இருந்தேன்"




சார் பொண்ணுங்க மூள நார்மலா இருக்கும் போது ஐம்பது சதவீதம் தான் வேலை செய்யுது.
ஆனா சண்டைனு வந்திட்டா நூறு சதவீதம் வேல செய்யிது.

பொண்ணு மொபைல்ல பேலன்ஸ் இருந்தா அவளுக்கு பாய் பிரெண்ட் இருக்கான்னு அர்த்தம்...
பையன் மொபைல்ல பேலன்ஸ் இருந்தா அவனுக்கு இன்னும் கேர்ள் பிரெண்டு இல்லைன்னு அர்த்தம்...!!!

நிஜமாதான் சொல்றீங்களா... டாக்டர்? என் மனைவியைக் காப்பாத்த வழியே இல்லையா...?
யோவ், உனக்கு இதைக் கேக்க கேக்க சந்தோஷமா இருக்கலாம்... அதுக்காக நான் எத்தனை தடவை திரும்ப திரும்ப சொல்லிக்கிட்டுஇருக்கிறது...?

# வானொலி அறிவிப்பாளர் கற்கை நெறி
## முற்றிலும் இலவசம்

FREE

தொடர்புகளுக்கு :
077 8866832 | 021 4927355 | 021 2223303



உங்கள் வீடுகளில் இடம்பெறும்
விசேஷ நிகழ்வுகளுடன்
(திருமணம், பிறந்தநாள், மரணச்சடங்கு),
சமூகத்தில் இடம்பெறும்
(ஆலய திருவிழா, பாடசாலை விளையாட்டுப் போட்டி)
உடனடியாக உலகிற்கு தெரிவிக்க...

LIVE TELECAST ☎ 021 4927355

Tamilcnn.lk உண்மைகள் உடனடியாக உலகிற்கு இணையம் மற்றும் தாய்வீடு பத்திரிகை

ஆகியவற்றில் உங்கள் அன்புக்குரியவர்களின்
மரண அறிவித்தல்கள் மற்றும்
நினைவஞ்சலிகள் என்பவற்றை ரூபா 3000 த்துடன்
உடனடியாக உங்கள் உறவுகளுக்கும் உலகிற்கும் தெரிவிக்க..

அழையுங்கள் :

| யாழ்ப்பாணம் | வவுனியா | கிழக்கு மாகாணம் |
|---|---|---|
| 262. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 54. A9 வீதி, வவுனியா. | 141, பிரதான வீதி, கல்முனை. |
| 021 222 3303 | 024 493 0063 | 067 222 6939 |
| 021 492 7355 | | 077 484 3738 |

# உடனடி வேலை வாய்ப்பு

Tamilcnn.lk உண்மைகள் உடனடியாக உலகிற்கு தாய்வீடு போன்ற ஊடகங்களுக்கு

- சந்தைப் படுத்தல்
- விளம்பர சேகரிப்பாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு : 077 8866832 | 021 4927355 | 021 2223303

# வாசகர்களுக்கு

தாய்வீடு சஞ்சிகையில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டுமா?

**வாய்ப்பளிக்க நாங்கள் தயார்**

**உங்கள் போட்டோவுடன் ஆக்கங்கள் எதுவானாலும் எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி : Tamilcnn.lk, 255, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
north@tamilcnn.com


# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கிருஸ்ணசைதன்ஜன்
189

வாழ்த்துவோர் :
கார்மேல் பார்த்திமா தேசிய பாடசாலைச் சமூகம்



T.Zainab Hina - 164



SLM.Jisan - 154



MRM.Rifky - 154



ARM.Waseem - 155




AJM.Fajeer - 148



AJ.Sihab husain - 166



A.G.M. Afrar - 151



ABA.Ramzath - 153

வாழ்த்துவோர் : சம்மாந்துறை வலயம்


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
செல்லமுத்துஸ்
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவருக்குமான சிறந்த
ஆடைத்தெரிவுகளின் காட்சியறை
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel : 0212263238
Main Street, Nelliady, karaveddy

# ஐயப்ப பக்தன் ஹொலிவூட்

ஒருபக்கம் இசை, சினிமாவில் அதிக ஈடுபாடு, மறுபக்கம் ஐயப்பனின் மேல் அதீத பற்று. அதனையும் விட சாதாரண பெண்களின் தலைமுடி நீளத்தையும் தாண்டுகிறது இவரது தலைமுடியின் நீளம். இப்படி எல்லாம் இருப்பவர் நம்மூர்க்காரர் அல்ல. இவர் ஒரு கறுப்பினக் கனேடியர். அடுத்து நீங்கள் கேட்பது புரிகிறது. இவரின் பெயர் தானே? ஹொலிவூட். இது தான் இந்த இசைக் காதலரின் பெயர்.


தாய்வீடு இதழுக்காக சென்னையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒரு பொன்மாலைப் பொழுதில் இவரைச் சந்தித்தேன்.

**காவி வேட்டியுடன் மாலையும் கழுத்துமாய் அமர்க்களமாக நின்றிருந்த அவரிடம் என்ன சாமி, இப்படி ஒரு தோற்றம் என்று ஆச்சரியத்துடன் கேட்க?**


கடந்த ஏழு வருடங்களாக வருசா வருடம் சபரிமலைக்கு சென்று வருகிறேன். நான் ஒரு ஐயப்ப பக்தர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

எட்டு வருசத்துக்கும் மேலாக கனடாவில் உள்ள ஐயப்பன் ஆலயத்தில் வாலண்டியராக சேவை செய்து வருகின்றேன். சபரிமலைக்கு போனால் அடுத்து வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்.

Fun Joke க்கு நான் சபரிமலை போகவில்லை. இரண்டு வருசத்துக்கு முன்னாடி திடீரென்று வேலை இழந்த போது ஐயப்பன் வழிகாட்டலில் உடனடியாக புதிய வேலையும் கிடைத்தது. இவரின் பேச்சைப் பார்த்தால் நம்மூர் சாமிகளுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர் அல்ல என்பது இவரது பேச்சில் தெளிவாகப் புரிகிறது.







சந்திப்பு, படங்கள்: செ. கிரிசாந்

**இந்தியா பற்றி?**

இந்திய மக்கள் ஸ்ரெஸ் இல்லாம கூலாக இருப்பார்கள். ஐ லவ் இண்டியா..

**தலைமுடியை எப்படி அண்ணா பராமரிக்கிறீர்கள்?**


அது ரொம்ப சிம்பிள் தம்பி. 18 வருசத்துக்கும் மேலாக இந்த தலைமுடி வெட்டாம இருக்கு. அதுக்கு விதவிதமாய் பின்னல் போடுவேன். முடிப் பாராமரிப்புக்கு பட்ஜெட்டில தனிய ஒதுக்கிடுவேன். நான் தெருவில் போனால் என்னை எல்லோரும் வினோதமாகத் திரும்பிப் பார்ப்பார்கள் அதற்கு என் தலைமுடி தான் காரணம்.


**மியூசிக், சினிமா மேல எப்படி கடும் ஆர்வம்?**

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஹொலிவூட் சிற்றியில் தான் இசை பற்றி படித்தேன். பயிற்சி எடுத்தேன். இந்த ஹொலிவூட் சிற்றி மேலுள்ள காதலால் அதன் பெயரைத் தான் என்னுடைய பெயராகவும் மாற்றிக் கொண்டேன். நான் பாடிய ராப் பாடல் ஒன்றில் தமிழ் உட்பட ஐந்து மொழிகள் கலந்து இருக்கின்றன. சில ஆங்கிலப் படங்களில் நடித்தும் இருக்கிறேன்.

**திருமணம் எப்போது?**

நான்கு குழந்தைகளைத் தத்தெடுக்கவே விரும்புகிறேன் என்கிறார் ஏஞ்சலினா பாணியில் கனடா ஐயப்பன் ஆலயத்திற்குச் செல்லும் நம் ஈழத் தமிழர்களுக்கு நிச்சயம் ஹொலிவூட்டை தெரியாமல் இருக்க முடியாது.




தாய்வீடு இதழானது எஸ். தேவகாந்தன் அவர்களினால் இலக்கம் 681, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஹரிகணன் அச்சகத்தில் 05.11.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.